G R

DIEU ET MON DROIT

# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

---

**இல. 7,707 — 1929 ம் ஹு வைகாசிமீ 3 ந் திகதி வெள்ளிக்கிழமை.**

---

## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

அரசாட்சி ஏறாவூர் கோறளை, மண்முனை வடக்கு, மண்முனை தெற்கு, எருவில் போரதீவு கரவாகு, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பாணமை, விந்தனை, வெவகம் என்னும் நீர்ப்பாய்ச்சற பிரிவுகளின் விஷயத்தில் அரசாட்சி ஏசண்டரின் பொறுப்பில் பரிபாலிக்கப்பட்டு வருவனவும், நீர்வரி அறவிடப்படாதனவுமான நீர்ப்பாய்ச்சற் குளங்கள் முதலியனவற்றைப் பரிபாலிப்பதற்காக 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கச் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட

பிரமாணங்கள்.

---

1. குளம் அரசாட்சியாருடையது. ஆனால் கமத்தொழில் முகாந்தரங்களுக்காக அதன்கீழிருக்கும் வயற்காணிப்பிரிவுகள் காணிக்காரரின் ஆட்சிக்குள் இருக்குமானால் அவரவர் வைத்திருக்கும பங்குவீதம், அது அவர்களின் பொதுச்சொத்தாக எண்ணப்படும்.

2. ஒரு கண்டத்திலிருக்கும் வயல்களுக்கு எவ்விடத்திலிருந்தாகுதல் தண்ணீர் பிரித்துக் கொடுக்கும்பொழுது இடையிலுள்ள வயல்களுக்கு முதல் தண்ணீர் கொடுத்துப் பிற்பாடு பள்ளக்காணிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும், தண்ணீர் பிரித்துக்கொடுப்பதில் மறு காணிக்காரருக்கு நட்டம் வரத்தக்கதாக யாராகிலும் எவ்விதத்திலாவது தலையிடக்கூடாது.

3. குளங்களின் கீழ்க்காணிகளுள்ள காணிக்காரரே யல்லாமல் வேறொருவரும் பயிர்ச்செய்கை நோக்கமாகக் குளத்திலிருந்து தண்ணீரெடுத்துப் பாவிக்க உரித்துள்ளவர்களாகமாட்டார்கள்.

4. முதல் அரசாட்சி ஏசண்டரின் உத்தரவுபெறாமல் ஒரு குளத்தின் தண்ணீரை வேறுகுளத்துக்குக்கீழ் பயிர்ச்செய்கைபண்ண எடுப்பது ஒருவருக்கும் நியாயமுறையாகாது, ஒரு குளத்தின்கீழ் செய்கை பண்ணப்பட்ட காணிகளின் பங்குக்காரர் தங்கள் வேளாண்மைக்கு வேறொரு குளத்தின் தண்ணீரைப் பாவிப்பதும் நியாயமுறையாகாது.

5. அரசாட்சி ஏசண்டரின், பிரதான தலைமைக்காரனின், அல்லது கிராமக் குள இன்ஸ்பெக்றறின் உத்தரவின்றி பங்குக்காரர் தங்கள் குளத்துக்கட்டை வெட்டவாவது, அல்லது குளத்துவானை அடைக்கவாவது கூடாது. சொல்லப்பட்ட இவ்வுத்தியோகஸ்தருடைய கட்டளைக்கு மாறாக, குளக்கட்டிலாவது, வானிலாவது, வாய்க்கால்களிலாவது ஒருவேலையையும் செய்யப்படாது.

ஆயின் வேறுவகையாக குளத்துக்கு நிச்சயமாக வரக்கூடிய பழுதைத் தடுப்பதற்காக அப்படிச்செய்வது அவசியமாகவிருந்து நேரத்தோடு மேற்சொலலிய உத்தியோகஸ்தர் எவருக்காவது அதைப்பற்றி அறிவிப்பது கூடாததாயிருக்கும் வேளைகளில் மேற்சொல்லிய உத்தரவைக் கேட்காதுவிடலாம் ஆனால் அவ்வித விசேஷ காரணங்களிருந்த தென்பதை நிரூபிப்பது பங்குக்காரர்மேல் விழுந்தகடமையாம்.

6. அரசாட்சி ஏசண்டரின் அல்லது பிரதான தலைமைக்காரனின் அல்லது கிராமக்குள இன்ஸ்பெக்றறின் உத்தரவின்றி குளக்கட்டின் எப்பகுதியிலாவது வேலிபோடக் கூடாது.

7. அரசாட்சி ஏசண்டர் அவசியமென்று உத்தேசித்தால் காணிக்காரரைக்கொண்டு குளங்களையும் கட்டுகளையும் சிறு வாய்க்கால்களையும், நீர்க்கால்களையும் மற்றுஞ் சிறுவேலைகளையும் புதுப்பிக்கலாம், அல்லது பழுதுபார்ப்பிக்கலாம். ஒவ்வொரு சொந்தக்காரனும் செய்யவேண்டிய வேலை மேற்குறிக்கப்பட்ட குளம் முதலியவற்றால் நயம்பெறும் பூமிகளின் விசாலத்தின் வீதப்படியிருக்கும்.

8. வேளாண்மைச் செய்கைக்குத் தேவையாய் நேரிடும் எல்லாச் சாதாரணமான பழுதுபார்த்தல் அதாவது வாய்க்கால்கள் துப்பரவுபண்ணுதல் குளக்கட்டுகள் புதுப்பித்தல் முதலியன செய்கைக்காரரால் செய்யப்பட வேண்டும்.

9. எல்லாக் குளங்களின் கட்டுகளும் அக்குளங்களுக்குக் கீழுள்ள காணிகளின் சொந்தக்காரருக் குள்ளே சரிபங்காய்ப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு காணிக்காரனும் அவனவனுக்கு விடப்பட்ட பாகத்தை எப்பொழுதும் காடு, குதுங்காடு மற்றும் வளரும் ஒவ்வொரு விதமான பற்றைகளும் இல்லாமலும் கறையான் புற்றுகளில்லாமலும் வைக்கவும் அப்பாகங்களில் வடிவாக புற்கத்தை யடித்துவைக்கவும் வேண்டும்.

10. 11 ம் பிரமாணத்தில் சொல்லியபடி ஆவசியகமாய்ச் செய்யவேண்டிய காரியங்களைத்தவிர 7, 8, 9 ம் பிரமாணங்களுக்குக் கீழ் ஒவ்வொரு நெற்காணிச் சொந்தக்காரனும் செய்யவேண்டியதாயிருக்கும் முழுப்பங்கு வேலை அவ்வேலையினால் நயமடையக் கூடியதாயிருக்கும் ஒவ்வொரு ஏக்கர்க் காணிக்கும் வருஷாந்தம் இரண்டுகன அடிமண்வேலைக்கு அல்லது ஐந்து நாள் வேலைக்கு அல்லது அவைகளுக்குப் பதிலான ஏக்கருக்கு இரண்டு ரூபாய் வீதமான முற்பணத்துக்கு மேற்படக்கூடாது. முழுத்தொகை வேலையையும் எந்த வருஷத்திலாவது சொந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ள அவசியமெனக் காணப்படாவிட்டால் அவர்களால் எவ்வளவு வேலை செயயப்படவேண்டுமென்று அரசாட்சி ஏசண்டரவர்கள் தீர்மானிப்பார்.

11. மேலே சொல்லியபடி வழக்கமான வருஷாந்த வேலையுடன் எப்பொழுதாவது அரசாட்சி ஏசண்டர் அல்லது வேலையைமேற்பார்வைபார்க்கும்படி அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்டவர் ஓர் அவசியமான பழுதுபார்ப்புவேலை அல்லது நட்டம் நேரிடுவதைத் தடுக்கும்வேலையைச் செய்துமுடிப்பதற்குக் கூலியாட்கள் தேவையென்பதாகக் கண்டால் ஒவ்வொரு காணிக்காரனும் தானுயாவது பதிலாள் மூலமாயாவது வேலைசெய்ய ஒழுங்குபண்ணி அவ்வேலை முடிவுபெறும் வரைக்கும் நாளாந்தம் வேலை நடைபெறும்படி செய்விக்கவேண்டியது. எவ்வருஷத்திலாது 10 ம் பிரமாணத்திற் சொல்லிய வழக்கமான வேலையின் இரட்டிப்பங்குககு மேற்பட்ட வேலையைச் செய்விக்கப்படாது.

12. 10 ம் பிரமாணத்திற் சொல்லிய வேலையைச்செய்ய எண்ணியிருப்பதையிட்டும் தேவையாயிருக்கும் வேலையின் வீதத்தையிட்டும் வட்டை விதானை குறையாமல் இருபத்தொரு நாட்களுக்குமுன் பறைசாற்றிப் பிரசித்தஞ்செய்விக்க வேண்டும். அப்படிப்பட்ட அறிவித்தல்களின் பிரதிகள் வட்டை விதானையால் அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது வேலையை மேற்பார்வையிடும்படி அவரால் தத்துவம் கொடுக்கப்பட்டவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

13. கிராமக்குள இன்ஸ்பெக்ற்றர் அல்லது பிரதான தலைமைக்காரன் அல்லது அவரிடமிருந்து அதிகாரம்பெற்ற எவரையும் தவிர வேறெவரும் எக்கிராமக்குளத்தின் தண்ணீர் மட்டத்தை மாற்றவும் வான்பாய்ச்சலில் அல்லது சலூஸ்கதவில் தொடவும்படாது.

14 ஒரு குளத்தால் நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளின் சொந்தக்காரரில் பெரும்பாகமானோர் அரசாட்சி ஏசண்டரின் உத்தரவோடு குளநிலத்தைச் செய்கைபண்ணத் தீர்மானித்தால் அப்படிச்செய்யலாம். அதிகப் பற்றானோர் குளநிலச்செய்கையைத் தீர்மானித்து அரசாட்சி ஏசண்டரின் உத்தரவு பெற்றாலன்றி குளநிலத்தையாவது அதின் எப்பாகத்தையாவது ஒரு சொந்தக்காரனும் செய்கைபண்ணப்படாது.

---

## 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்.

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி எருவூர் கோறளை, விந்தனை வெவகம் நீர்ப்பாய்ச்சற் பிரிவிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகாரமந்திர சபையோடுகூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கிகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனரவர்கள் கட்டளைப்படி,

எவ். ஜீ. றீரல்,
அக்ற்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஆண்டு ஏப்றில்மீ 30 ந் தேதி.

---

### அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச் செய்கையைக்குறித்து 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கக கட்டளைச் சட்டத்தின் 11 ம் பிரிவின்கீழ் எருவூர் கோறளை விந்தனை வெவகம நீர்ப்பாய்ச்சல் பகுதிகளுக்கென்று உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 1922 ம் ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்பாய்ச்சற் கட்டளைச் சட்டத்தின் 20A ம் பிரிவின்கீழ் அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவோர்கள்.

2. வட்டைவிதானை என்பவன் ஒரு வட்டை, வயற்பகுதி அல்லது பகுதிகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கப்படாது.

வட்டைகாவலன் என்பவன் வட்டைவிதானையின் உதவியாளன், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டைகவலனை அல்லது பலவட்டைகாவலரை நியமனஞ்செய்யலாம்.

வட்டைகாவலரின் தவறுகளுக்கு வட்டைவிதானையே பொறுப்பாளியாவான்.

வட்டைவிதானைமாரும், வட்டைகாவலரும் வேளாண்மை காலத்தில், கூடுமானல், தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்கவேண்டும். அவர்கள் வேளாண்மைச் செய்கை காலத்தில் அல்லது தங்கள் ஊழியந் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாயச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக் காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது வட்டையைவிட்டு விலகக்கூடாது.

வட்டைவிதானை சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துக்கு அமைவாக காணிக்காரரால் தெரியுசெய்யப்படுவான். ஆனால் நியமனமாயத் தெரிவுசெய்யப்படும் வரைக்கும், அரசாட்சி ஏசண்டர் ஒருவனைக் கொஞ்சக்காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானைமார் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர் பொறுப்பின்கீழ் தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வை யிடுவார்கள். அவர்கள் இப்பிரமாணங்களை யாவரும் கைக்கொள்ளும்படி செய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்குகள் தொடரப்படும்படியாக அம்மீறுதல்களைக் குறித்துப் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிக்க வேண்டும்.

4 வட்டைவிதானைமார் தங்கள் பங்காக செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவணவிதைப்புக்கு ஒருமரக்கால் வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். அத்துடன் வட்டைகாவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரக்கால்வீதம் அவன் பங்காக மேலதிகம் வைக்கப்பட வேண்டும். ஒரு வட்டைகாவலனுக்குமேல் நியமிக்கப்பட்டிருந்தால், அந்த பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிக்கப்படும். நெல்லு களத்திலிருந்து கொண்டுபோகப் படுவதற்குமுன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானையும் வட்டைகாவலனும் பற்றுச்சீட்டுக் கொடுக்க வேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுப்பங்கை அல்லது அதிலேதமொரு பாகத்தைக் கொடாதபடி தடுக்கலாம் தேவையெனக் காணில் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானை அல்லது வட்டைகாவலனுக்காக வேலைபார்த்தவருக்கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்சற் குற்றப்பணத்தியுடன் சேர்த்துவிடலாம். வட்டைவிதானைக்கு அல்லது வட்டைகாவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கப்பட்ட பங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்றுக்கொள்ள ஒருவனை அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் சம்பளத்துக்குமாக தடுக்கப்பட்ட பங்கின் ஒருபகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவு செய்யலாம் இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவணவிதைப்புத் தரை இரண்டு ஏக்கர் விசாலமுடையதாகக் கணிக்கப்படும். விளைவில் வட்டைவிதானைக்கும் வட்டைகாவலனுக்கு முடைய பங்கு வேளாண்மை வெட்டிமுடிந்து நாலுமாதத்துக்குள் கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க் கொடுக்கப்பட வேண்டும். அவ்வக்காலங்களில் அந்தந்த ஊர்களிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிக்கப்படும்.

5. வேளாண்மைகாலம் சமீபிக்கும்போது அது முன்மாரி, காலவேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் காணிக்காரர் எல்லாருஞ் சேர்ந்து ஒரு சங்கம் கூட்ட வேண்டும். இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம்பெற்ற இன்னொருவர் சபாநாயகமாயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுககப்பட்டவரால் சங்கங் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை எழுநாட்களுக்குமுன் விளம்பரஞ் செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.—

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருக்கு, பின்சொல்லிய கருமங்களில் ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன:—

(a) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.
(b) செய்கைபண்ணவேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேற்சொல்லிய திகதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(ii) கீழே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ் செய்வார்கள், அவையாவன:—

(c) இடாப்புக்கொடுத்தலுக்கு உவந்ததிகதிகள்.
(d) வேலி அடைத்து முடிப்பதற்கு உவந்ததிகதிகள்.
(e) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்பட வேண்டு மென்பதும்.
(f) செய்கைபண்ணும் விதம்.
(g) ஒவ்வொரு வட்டையிலும் விதைபடவேண்டிய நெற்சாதியும்.
(h) வேளாண்மைகாலத்தில் பசுமாடுகளும், எருமை மாடுகளுங் கட்டப்பட வேண்டிய இடமும் மாதிரியும்.
(i) வேளாண்மைக் கடமைகளிலிருந்து தங்களை விலக்கக் கேட்கும் காணிக்காரர்களுடைய கேள்விகளைக் கவனிப்பதும்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளாண்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமிக்கப்பட்ட விசாலஞ் செய்கை பண்ணுவதற்குப் போதிய தண்ணீர் இல்லாமலிருந்தால், 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்ய வேண்டிய தேதிகளில் ஏதும் மாற்றங்கள் வேண்டுமோவென்றும் தண்ணீர்க் குறைவின் நிமித்தம் செய்கைபண்ணமல் விடப்படவேண்டிய வயற் பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டங் கூடுதல் வேண்டும். ஆனால், தண்ணீர்க்குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப் பற்றி இப்படிக் கூடிய கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்துகொள்ளக்கூடிய தாயிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டு மென்று தீர்மானஞ்செய்ய அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்டவருக்கு அதிகாரமுண்டு. தொடக்கத்தில் நீர்ப்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடப்பரப்பின் காணிக்காரர் அல்லது குத்தகைக்கார ரெல்லாரும் விசாலத்திற் குறைக்கப்பட்ட இடப்பரப்பின் தத்தமதற்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கைபண்ண உரித்துடையவராவர். 6 ம், 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிக்கப்பட்ட வண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அறிவித்தல்கள் ஒட்டுவதாலும், அல்லது வேறு தக்கமாதிரிகளாலும், 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களின்படி கூடிய கூட்டத்தின் தீர்மானங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசாரஞ் செய்விப்பார். சொந்தக்காரராயாவரும் கூட்டத்தின் தீர்மானங்களின்படி செய்யக்கடமைப்பட்டவர்களாவர்கள். ஆனால் போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமாயிராவிட்டால கூட்டத்தைத் தவணைபோட அல்லது 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத் தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவர் தகுதியுள்ளவரா யிருப்பர் அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப்போலப் பெலப்புடையதா யிருக்கும்.

9. 6 (i) (b) ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைக்காரனும் தங்களின் வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைக்காரர் வேளாண்மைக்காரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டைவிதானைக்குக் கொடுக்கவேண்டியது. இவ்விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் கொடுக்கப்படும் அச்சுக்கடுதாசியில் எழுதப்பட்டு சொந்தக்காரனுடையவும், முல்லைக்காரனுடையவும், செய்கைக்காரனுடையவுங் கையொப்பங்களையும் அல்லது இரண்டு சாட்சிகள் முகதாவி லிடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதா யிருக்கவேண்டும். இந்த அச்சுக்கடுதாசியில் வேண்டிய விபரங்க ளெல்லாஞ் சரியாய் நிரப்பப்பட வேண்டும். பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவராவார்கள். இந்த இடாப்புக்கொடுத்த நாள் தொடக்கம் முல்லைக்காரனும், செய்கைக்காரனும், சொந்தக்காரனும், குத்தகைக்காரனும் வேளாண்மைச் செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிக ளாவார்கள். போதிய நியாயமின்றி கவலையீனம் அல்லது தவறு நடப்பின் அவர்களோர் அடாத்துச் செய்த குற்றமுடையவராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னொருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதன மில்லாதிருக்கும்போது, யாதும் பிசகு உண்டானால் முந்திய வருட வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்தவரிடமிருந்து இடாப்பு ஏற்கப்படும். வட்டைவிதானை இடாப்பை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் புறநீங்கலாக) இடாப்பில் கையொப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்.

11. எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணவில்லை யென்று காணப்படுமாகில் அதைப்பற்றி வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான நீர்ப்பாய்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கை நீக்கிவிடாமல் அல்லது அக்காணியின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால் வேறொரு சொந்தக்காரனையேனும் குத்தகைக்காரனையேனும் அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் இல்லாவிடத்து அப்பங்கைச் செய்கை பண்ணவிரும்பிக் கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கைச் செய்கைபண்ணவிடலாம். இவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் அம்முறைச் செய்கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைக ளெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் அல்லது குத்தகைக்காரனால் தனது காணி செய்கைபண்ணப் படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்க ளெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

12 எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது 6 ம் பிரிவின்கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கிவிடப்பட்டாலன்றி, போகவேளாண்மைக்கு இப்பிரமாணங்களின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது ஏதும்வேலைசெய்ய வேண்டியவனாயிருந்து அதைச் செய்யத் தவறினால், அவ்வேலை செய்வதற்கு மதித்த தொகையைப் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் எழுத்துமூலமாய் அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் நீர்ப்பாய்ச்சல் குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும். பிரதான நீர்ப்பாச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்து சென்ற செலவு இவ்வளவென்று அறிவிப்பார் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் (Director of Irrigations) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும். அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனது திருப்திக்கேற்க எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

14. பட்சிகள் அல்லது காட்டுமிருகங்கள் வந்தொதுங்கக்கூடிய மரங்கள் அல்லது குறுங்காடுகள் ஊரவர்களின் தரைக்குள்ளிருந்தால் சொந்தக்காரர்களினால் அல்லது குத்தகைக்காரர்களினால் அவைகள் அகற்றப்படவேண்டும்.

15. பழைய வழக்கமுறைப்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும்தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக் கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவைதெனக் கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்படவேண்டும்.

16. தண்ணீர் குளக்கட்டிலிருந்து வெளியாகிவட்டைகளுக்கு வந்தபின் அந்தத் தண்ணீர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடை அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அதிகாரத்துக்கு அமைவாக வட்டைவிதானையாற் பகிர்ந்து கொடுக்கப்படும்: வட்டைவிதானை தன்னுடை வட்டைக்குள் தண்ணீர் விடப்படவேண்டிய காலத்தில் தண்ணீர் ஓடுவதைத் தடுக்கக்கூடிய (நீர்ப்பாய்ச்சற் பகுதி தலைவரின் பொறுப்பிலில்லாத வரம்புக்கட்டைதையும் வெட்டுவிக்கலாம். நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் பொறுப்பில் இல்லாத எவ்வாய்க்கால் வழியேயும் அவ்வட்டைக்குட் போக வேண்டிய தண்ணீர் வெளியே ஓடுமாகில் அவ்வாய்க்காலகளையும் அவர் மூடுவிக்கலாம். அக்காலத்தில் மாத்திரமன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச் சேராதவரம்புக் கட்டுகளுக்கு அல்லது வாய்க்கால்களுக்கு அவன் ஒன்றும் செய்யப்படாது.

17. எவனும் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிகளுக்குப் பாயுந் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால், அல்லது மேடான பூமிகளிலிருந்து வரும் மிச்சத்தண்ணீரைத் தடைப்படுத்தினால், அல்லது பொதுவாய் வட்டைகளுக்குள் தண்ணீர் பங்கீடுசெய்வதில் எவ்விதமேனும் தலையிட்டாத வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடங்களுக்குப் போய், தானே அப்படியான வக்கடைகளைத் திறத்தல் அல்லது தடைகளைத் துப்பரவுபண்ணல் முதலியன செய்யவேண்டும். வட்டைவிதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிடவும் அதைத் தடைப்படுத்தவும் வேறு வழியாய்த் தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறுவிதமாகப் பாவிக்கவுங் கூடாது.

18. வட்டை விதைத்து மூன்று நாட்களுக்குள் வட்டைவிதானை முழுவேலியையும் அளந்து ஒவ்வொரு காணிக்காரரின் செய்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு காணிக்காரனுடைய பங்கு வீதப்படி பிரிவிட்டுக் கொடுக்கவேண்டும். பிரிவிடப்பட்டவேலி காணிக்காரனின் வயலுக்கருகில் இல்லாமலுமிருக்கலாம். அவ்விதமாய்ப் பிரித்துக் கொடுத்தபின் ஒவ்வொரு காணிக்காரனின் செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்த வேலியில் நீளத்தைக் காட்டும் ஒரு இடாப்பை வட்டைவிதானையுடனே பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அனுப்பவேண்டும். அவர் அதைபின் தேவைப்படும்போது பார்க்கிறதற்குக் கட்டிவைத்திருத்தல் வேண்டும். புதுக்கம்புகள் தேவையாயிருந்தால் வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும். அதன்பின் அவர் வட்டைவிதானைபேரில் கம்புகள் வெட்டுவதற்கு அவருக்கு ஒரு லைசென்ஸ் பத்திரம் வாங்கிக்கொடுப்பார்.

19. 6 ம் பிரமாணத்துக் கமைவாகக் கூடிய கூட்டத்தில் தீர்மானஞ்செய்த திகதிக்குள் செய்கைக்காரர்கள் வேலியைமுடித்து தேவையான காவல்குடில்கள் வைக்கவேண்டியது மல்லாமல் ஒவ்வொரு செய்கைக்காரனும் வேலிகளையுங் காவல் குடில்களையும் நல்ல நிலைபரத்தில் வைத்து வட்டைவிதானை கட்டளைப்படி ஒழுங்கான காவல் காக்கவேண்டும். திறமையில்லாதவர்களையும் பதினாறு வயதுக்குட் பட்டவர்களையும் காவலாளிகளாய் வைக்கப்படாது.

20. இரவில் வட்டைவிதானை அல்லது வட்டைகாவலன் வட்டைசுற்றிப் போகும்போது மூல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் வெளிச்சத்துடன் அவர்களோடு கூடப்போகவேண்டும், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையில்லையென்று என்னும் வரைக்கும் இவ்விதம் நடைபெறவேண்டும்.

21. எண்ணுகாரணத்தாலாகுதல் வட்டையில் ஏதும் ஒரு பங்கு மற்றப்பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால் செய்கைக்காரர்கள் அப்பங்கை வெட்டிச் சூடுவைக்க விடலாம். ஆனால் வட்டைவிதானையுடைய உத்தரவின்றி நெல்லு அடித்து முழுவதையும் வெளியேகொண்டுபோக விடப்படமாட்டாது. அவர்கள் வட்டையிலிருந்து மற்ற வேளாண்மை முழுவதும் வெட்டிச் சூடாக்கும்வரையில் வட்டையைக் காவல்பார்த்து வேலியையும் பத்திரப்படுத்தவேண்டும். 6 ம், 7 ம் பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின், காலம்பிந்தி விதைத்ததினால் அல்லது கூட்டத்தில் தீர்மானஞ்செய்யத நெல்லைத்தவிர வேறுவிதமான நெல் விதைத்ததினால், வட்டையில் எப்பகுதியாவது விளையாமல் இருந்தால், மற்றப்பகுதியின் செய்கைக்காரர் அப்பூமி விளையும்வரையில் வேலியைப் பத்திரப்படுத்த அல்லது காவல்காக்கக கடமைப்பட்டவர்களாயிருக்கமாட்டார்கள்.

22. வேளாண்மை வெட்டிமுடிந்தபின் வேலியைப் பிடுங்கித் தடிகளைத் தான் கட்டளையிடும் இடத்தில் குவித்துவைக்கும்படி வட்டைவிதானை செய்கைக்காரருக்குக் கட்டளை செய்யவேண்டும். சொந்தக்காரர்கள் வட்டைவிதானை சம்மதத்துடன் வயல்களிலிருந்து தடிகளை கொண்டுபோகலாம். ஆனால், அவர்கள் கொண்டுபோகும் தடிகளுக்கு வட்டைவிதானைக்குப் பற்றிச்சீட்டுக்கொடுத்து, மறுபோகச் செய்கைக்கு வேளாண்மை செய்தாலுஞ்செய்யாவிட்டாலுந் திருப்பிக் கொடுக்கவேண்டும். அல்லாவிடில் அவைகளின் மதிப்புவிலை கொடுப்பதற்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள்.

23. எல்லாச் செய்கைகாரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் தப்பரவுபண்ணிப் பெலமான கட்டைவேலி கட்டவேண்டும். அங்கேதான் சூடுகள் வைக்கவேண்டும், செய்கைக்காரர் தங்கள் முறைப்படி வேளாண்மைவெட்டி முடிந்த திகதி தொடக்கம் இரண்டுமாதம் வரைக்கும் சூட்டைக் காவல்காக்கவேண்டும்.

24. வேளாண்மைச் செய்கை முடிந்தபின் 4 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான கூலியும், மாட்டுக்கூலியும் மற்றுஞ் செய்கைக்கடங்கிய கொடுக்குமதிகளெல்லாம் இறுபடுமுன் யாதொருநெல்லும் வயலிலிருந்து கொண்டுபோகப்படலாகாது. பங்குக்குச் செய்கைபண்ணினால் வயற் சொந்தக்காரனுக்குப் போமதியானவைகள் கொடுத்துத் தீருமட்டும் நெல்லை கொண்டுபோகப்படாது.

நெல்லைக் களத்தில் வைக்கிறதினால் நெல்லுக்கு அதிக பழுதுவருமென்று கண்டால், சொந்தக்காரன், அல்லது செய்கைக்காரன். ஆராயிருந்தாலுஞ்சரி, தான் கொடுக்குமதியான மற்ற ஆட்களுடைய உத்தரவுப்படி நெல்லை கொண்டுபோகலாம். அல்லது அப்படியான உத்தரவு கொடுக்கப்படாவிட்டால் தான் கொடுக்குமதியான நெல்லை களத்தில்வைக்க அவன் பாத்திரனுவான் மிகுதியை அவன் கொண்டுபோகலாம்.

25 நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் பொறுப்பிலில்லாத எல்லா வயல்வாய்க்கால்களும், நீர்க்கால்களும் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கீழிருக்கும் வட்டைவிதானை பொறுப்பிலிருக்கும். எவனாவது அப்படியான வாய்க்கால்களையாவது நீர்க்கால்களையாவது அவைகளுக்காக விடப்பட்ட நிலத்தையாவது மூடவேனும் கூட்டிப் பிடிக்கவேனும்படாது.

26. காணிக்குள் அல்லது வெளியே புதுவாய்க்கால், வரம்பு அல்லது வேறுகட்டு வேலைகள் தேவையெனக் கண்டால், 13 ம் பிரமாணத்திற் சொல்லியபடி நயம்பெறுங் காணிக்காரரால் தங்கள் தங்களுடைய பங்குவீதப்படி அவைகள் திறக்கப்படவேண்டும். நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவருடைய (Director of Irrigation) பொறுப்பிலிருக்கும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின்கீழ், அவ்வகைககட்டு வேலைகளைக் கட்டுவதற்கு உத்தரவு கேட்கும் கேவவிகள் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனிடம அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனிடம் எழுத்தில் கேட்கப்படவேண்டும்.

செய்யப்படவேண்டிய வேலையை நடத்துவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் சொந்தககாரருக்குப் பொதுவாக உத்தரவு கொடுக்கலாம். அல்லது உத்தரவு கொடுக்க மறுக்கலாம், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அபிப்பிராயப்படி செய்யக்கேட்ட வேலையானது நீர்ப்பாய்ச்சல் ஒழுங்கின்படி பொதுவான நீர்ப்பாய்ச்சலுக்கு இடையூறாய் அல்லது கேட்ட கேள்விக்காரரை யொழிந்த மற்றக்காணிச் சொந்தக்காரருக்கு நட்டமானதாயிருக்குமென்றால் அவ்விண்ணப் பத்திரங்களை அவர் அரசாட்சி ஏசண்டருக்குத் தன்னுடைய அறிகைப் பத்திரத்தோடு அனுப்பவேண்டும்.

செய்யப்படவிருக்கும் கட்டுவேலை எந்தச் சொந்தக்காரர்களின் காணிகளைத் தாக்குமோ அந்தச் சொந்தக்காரர்களின் நியாயங்களைக் கவனித்துப் பார்த்ததின்மேல் அரசாட்சி ஏசண்டர் அக்கேள்வி சார்வாய்க் கவனிக்கப்படக் கூடியதென்று எண்ணுவாராகில் அவர் அதை நீர்ப்பாய்ச்சற் பெரிய இஞ்சினீருக்கு அனுப்புவார். நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் அதை அங்கீகரித்துக்கொண்டால் உத்தரவு அளிக்கப்பட்டதென்று அவர் சொந்தக்காரருக்கு அறிவிப்பதுடன் அந்த வேலையைச் செய்யத் தொடங்குவதற்கு உதவிசெய்து அந்தக் கட்டுவேலையைச் செய்வதற்கு வேண்டிய யோசனையையும் சொல்லிக் கொடுப்பார்.

வயல் வாய்க்கால்களுக்கு நிலம் விடப்பட்டு அளந்து எல்லை அடையாளக்கட்டை நாட்டப்பட்ட புதுக்காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் தங்கள் காணிகளிருக்கும் கூட்டமான கண்டங்களை நீர்ப்பாய்ச்சல் செய்வதற்காய் படத்திலே காட்டப்பட்டிருக்கும் வயல் வாய்க்கால்களை பங்குவீதம் உண்டாக்கவேண்டும்.

அப்படியான எந்த வயல் வாய்க்காலும் நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் மெச்சிக்கொண்ட ஒழுங்குப் பிரகாரம் காணிச் சொந்தக்காரரால் உண்டாக்கப்பட வேண்டும்.

அப்படியான காணிச்சொந்தக்காரனெவனாவது மற்றெந்தச் சொந்தக்காரரும் தங்கள் வயல் வாய்க்கால் பங்குகளை வெட்டாத அசட்டையினிமித்தம் நீர்ப்பாய்ச்சலுக்குத் தண்ணீர் பெற்றுககொள்ளக் கூடாமலிருந்தால், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வேலையைச் செய்துமுடிக்கும்படி மற்றச் சொந்தக்காரருககுக் கட்டளைபண்ணவேண்டும்.

27. தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அப்படியான வாய்க்கால்களுக்கும் கட்டுகளுக்கும் அல்லது மதவேலைகளுக்கும் இடங்கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படுங் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளைச் செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிக்கு பதில்கொடுக்க அல்லது தங்கள் தங்கள் காணிகளுக்கு வந்த நயவீதம் நட்டத்தை இறுக்கவும் பாத்திரவாளிகளாவார்கள். கொடுக்கவேண்டிய நட்டம் நீர்ப்பாய்ச்சல் இஞ்சினீருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய ஆலோசனையுடன் அரசாட்சி ஏசண்டரால் தீர்மானிக்கப்படும்.

28. அரசாட்சி ஏசண்டர் குறித்த காலத்துக்குள் 13 ம், 19 ம், 26 ம் இலக்கப் பிரமாணங்களிற் சொல்லிய வேலைகளை எக்காணிக்காரரேனும் செய்யத்தவறினால் அது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் செய்யப்பட்டுச் சென்ற செலவும் தெரியப்படுத்தப்படும் இச்செலவு 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்திற் சொல்லியபடி அறவிடப்படும்.

29 ஒரு கண்டத்தில் இரண்டு வயல்களுக்கிடையிலுள்ள வரம்பையாகுதல். எல்லையையாகுதல் ஒருவரும் மாற்றவும் அல்லது அழிக்கவும்படாது. அப்படி மாற்றினதை அல்லது அழித்ததை வட்டைவிதானை அறிந்தால் சொந்தக்காரர்களுககு அதனை அறிவித்தல்செய்து சாட்சிகளுடன் குறிக்கப்பட்ட இடத்துக்குப்போய் எல்லையைப் பழய நிலைபரத்துககு கொண்டுவரும்படி அவர்களைக் கேட்கவேண்டும். மூன்று நாட்களுக்குள் இவைகளைச் செய்யத்தவறுங்காலம் அவன் இதனை கிராமச்சங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

30. அரசாட்சியாரிடமாவது அல்லது மறுபேரிடமிருந்தாவது வாங்கப்பட்ட அல்லது இனிமேல் வாங்கப்படும் காணிகளின் சொந்தக்காரரும் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் குட்பட்டவர்களாவதுமன்றி, அவர்களின காணிகள் தண்ணீர்பாய்ச்சக் கூடியதெனக் கண்டு நீர்வரி இடாப்பிற் சேர்க்கப்பட்டவுடன் எந்த வாய்க்கால் வழியாக அப்பூமிகளுக்குத் தண்ணீர்பார்ச்சுதல் நயமாக விருக்கின்றதோ (நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவர் தண்ணீர் போதியதென்று கண்டால்) அந்த வாய்க்கால் வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உரித்துடையவர்களுமாவார்கள். மேற்சொல்லிய சொந்தக்காரர்களும் செய்கைக்காரர்களும். வரிகளைப்பற்றிய காரியத்தைத்தவிர மற்றப்படிக்கு ஏற்கனவே நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளின் சொந்தக்காரருக்கும் செய்கைக்காரருக்கும் உடைய விசேஷ சகாயங்களையும் உரித்துகளையும் அனுபவித்தல் வேண்டும்.

31. வேளாண்மைச் செய்கையைப்பற்றி எந்தக் காரியத்திலாவது காணிக்காரரின் ஆலோசனையும் உதவியுந் தேவையென்று அரசாட்சி ஏசண்டராவது சொந்தக்காரரின் அதிகப்பகுதியானவர்களாவது எண்ணுங்காலம், சொந்தக்காரரின் ஒரு கூட்டம் வைக்கப்படலாம்.

32. அரசாட்சி ஏசண்டராலும் காலத்துக்குக்காலம் நியமனம்பண்ணப்படும் உத்தியோகத்தர்களாலும் தலைமைக்காரர்களாலும் இப்பிரமாணங்கள் வலியுறுத்தப்படுவதுமன்றி இவைகளை மீறுவோர்கள் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி தண்டிக்கப்படுவதற்குப் பாத்திரவாளிகளுமாவார்கள்.

33. கேட்கப்படும்போது எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய தரையின் சரியான எல்லைகளைக் காட்டவேண்டியதுமன்றி அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால் அவ்வெல்லைகளைக் குறிக்கும்படி வரம்புகள் அல்லது தகுந்த அடையாளங்கள் போடவேண்டும்.

34. சொந்தக்காரர்களும் இக்காரியத்திற் சம்பந்தமுடைய மற்றவர்களும் தங்கள் வயல்களில் சேதம்போகுந் தண்ணீருக்கும் பாத்திரவாளிகளாயிருப்பார்கள், இப்பிரமாணங்களால் தேவையாயிருக்கும் ஏதும் வேலையைக காணிச் சொந்தக்காரராவது அல்லது செய்கைக்காரராவது செய்யத் தவறிவிடுவதினிமித்தம் அளவுக்கு மேற்படியான தண்ணீர் தேவையாயிருந்தால். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தம் எண்ணப்படி தண்ணீரைத் தடுக்கவும் திருப்பவும் முற்றாய்க் கொடுக்காமல் விடவும் அல்லது வேறு சரியெனக் காணும்விதஞ் செய்யவுங் கூடும், நீர்ப்பாய்ச்சல் அல்லது வேறு வாய்க்கால்களில் நெல் விதைக்கப்படாது.

35. நீர்வரிகொடாத காணிச் சொந்தக்காரர் பதிவுபெற்று நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளுடன் கூட வேளாண்மைசெய்தால் அக்காணிகள் போது வேலிக்குளிருக்குமிடத்து, இதிற் சொல்லிய 14 ம், 15 ம், 17 ம், 18 ம், 19 ம், 20 ம், 21 ம், 22 ம், 23 ம், 24 ம், 25 ம், 26 ம் பிரமாணங்களைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள்.

36. வேளாண்மைச் செய்கைக்காலத்தில் தன்னுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில் அல்லது அதற்குச் சமீபமாகத் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக் கூடியதாய் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்கு வட்டைவிதானைக்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்தின்படி பிடிபட்ட ஆடுமாடுகளை கிராமக்கோட்டுக்கு முன்பாகக் கொண்டுபோவதற்கு தாமதமின்றி அவ்விடத்துப் பொலீஸ் தலைமைக்காரனுக்கு ஒப்புவித்தல் வேண்டும்.

37. செய்கைக்காரரை வேலைகொள்ளும் ஒவ்வொரு சொக்தககாரனும் அல்லது குத்தகைக்காரனும் ஒரு புஸ்தகம் வைத்திருந்து தன் செய்கைக்காரருக்கு முற்தொகையாகக கொடுத்த நெல்லை அல்லது பணத்தை கொடுத்த திகதிபோட்டு அப்புஸ்தகத்தில் பதிந்துவைக்க வேண்டும், அவர் தன் செய்கைக்காரரோடு மூன்று முறையாகிலும் கணக்குச் சரிபார்க்க வேண்டும். அதாவது, விதைப்பு முடிந்தவுடனும், வேளாண்மை வெட்டத்தொடங்கச் சற்றுமுன்னும், சூடுபோட்ட பின்னும் கணக்குப்பார்த்து, செய்கைக்காரர் அது சரியென்று ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய கையொப்பங்களை அல்லது பெருவிர லடையாங்களைப் புஸ்த்தகத்தில் பதிந்த கணக்குக்குக் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்.

38. முந்திய பிரமாணங்கள் யாவும் இதனுல் அழித்துவிடப்படுகின்றன.

---

## 1917 ம் ஆணடின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்.

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினுற் திருத்தபபட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி மண்முனை வடக்கு நீர்ப்பாய்ச்சற் பிரிவிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்ட மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகார மந்திரசபையோடுகூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஹு ஏப்றில்மீ 30 ௳.

———

எவ். ஜீ. றிரல்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச் செய்கையைக்குறித்து 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 11 ம் பிரிவின்கீழ் மண்முனை வடக்கு, நீர்ப்பாய்ச்சற் பகுதிக்கென்று உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 1922 ம் ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 20a ம் பிரிவின்கீழ் அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைககாரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவார்கள்.

2. வட்டைவிதானை என்பவன் ஒரு வட்டை, வயற்பகுதி அல்லது பகுதிகளுககுப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கக்கூடாது.

வட்டைகாவலன் என்பவன் வட்டைவிதானையின் உதவியாளன். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டை காவலனை அல்லது பல வட்டைகாவலரை நியமனஞ் செய்யலாம்.

வட்டைகாவலரின் தவறுகளுக்கு வட்டைவிதானையே பொறுப்பாளியாவான்.

வட்டைவிதானைமாரும், வட்டை காவலரும் வேளாண்மை காலத்தில், தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் குடியிருக்கவேண்டும். அவர்கள் வேளாண்மைச் செய்கை காலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக் காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது வட்டையைவிட்டு விலகக்கூடாது.

வட்டைவிதானை சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துக்கு அமைவாக காணிக்காரரால் தெரிவுசெய்யப்படுவான், ஆனு ் நிய னமாய்த் தெரிவுசெய்யப்படும் வரைக்கும் அரசாட்சி எசண்டர் ஒருவனைக் கொஞ்சக் காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானைமார் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர் பொறுப்பின்கீழ் தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வையிடுவார்கள். அவர்கள் இப்பிரமாணங்களை யாவரும் கைககொள்ளும்படி செய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்குத் தொடரும்படியாக அம்மீறு தலைககுறித்து பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிக்கவேண்டும்.

4. வட்டைவிதானைமார் தங்கள் பங்காக செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவணவிதைப்புககு ஒரு மரக்கால் வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். அத்துடன் வட்டைகாவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரக்கால்வீதம் அவன் பங்காக மேலதிகம் வைக்கப்பட வேண்டும். ஒரு வட்டைகாவலனுக்குமேல் நியமிககப்பட்டிருந்தால், அந்தப் பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிக்கப்படும். நெல்லு களத்திலிருந்து கொண்டுபோகப்படுவதற்குமுன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானையும் வட்டைகாவலனும் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுப்பங்கை அல்லது அதிலேதுமொரு பாகத்தைக் கொடாதபடி தடுக்கலாம். தேவையெனக் காணில் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானை அல்லது வட்டை காவலனுக்காக வேலைபார்த்தவருக்குக் கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்சற் குற்றப் பணநிதியுடன் சேர்த்துவிடலாம். வட்டைவிதானைக்கு அல்லது வட்டைகாவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கப்பட்ட பங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்றுக்கொள்ள ஒருவனை அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் சம்பளத்துக்குமாக தடுக்கப்பட்ட பங்கின் ஒரு பகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவு செய்யலாம். இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவணவிதைப்புத் தரைமூன்று ஏக்கர் விசாலமுடையதாகக் கணிக்கப்படும். விளைவில் வட்டைவிதானைக்கும் வட்டைகாவலனுக்கு முடைய பங்கு வேளாண்மை வெட்டிமுடிந்து நாலு மாதத்துக்குள் கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க் கொடுக்கப்பட வேண்டும். அவ்வக்காலங்களில் அந்தந்த ஊர்களிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிக்கப்படும்.

5. வேளாண்மைகாலம் சமீபிக்கும்போது அது முன்மாரி, கால வேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் காணிக்காரர் எல்லாருஞ் சேர்ந்து ஒரு சங்கம் கூட்டவேண்டும். இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம்பெற்ற இன்னொருவர் சபாநாயகராயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுககப்பட்டவரால் சங்கங் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம் தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை ஏழு நாட்களுக்குமுன் விளம்பரஞ்செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.—

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருக்கு, பின்சொல்லிய கருமங்களில் ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன :—

(a) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.
(b) இடாப்புக் கொடுத்தலுக்கு உவந்த திகதிகள்.
(c) வேலியடைத்து முடிப்பதற்கு உவந்த திகதிகள்.
(d) செய்கைபண்ணவேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேறசொல்லிய திகதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(ii.) கீழ்ே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ் செய்வார்கள், அவையாவன :—

(e) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்பட வேண்டுமென்பதும்.
(f) செய்கைபண்ணும் விதம்.
(g) ஒவ்வொரு வட்டையிலும் விதைப்படவேண்டிய நெற்சாதியும்.
(h) வேளாண்மைகாலத்தில் பசுமாடுகளும், எருமை மாடுகளுங் கட்டப்படவேண்டிய இடமும் மாதிரியும்.
(i) வேளாண்மைக கடமைகளிலிருந்து தங்களை விலக்கக் கேட்கும் காணிக்காரர்களுடைய கேள்விகளைக் கவனிப்பதும்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளாண்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமிக்கப்பட்ட விசாலஞ் செய்கைபண்ணுவதற்குப் போதிய தண்ணீர் இல்லாமலிருந்தால், 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்ய வேண்டிய தேதிகளில் ஏதும் மாற்றங்கள் வேண்டுமோவென்றும் தண்ணீர்க் குறைவின் நிமித்தம் செய்கைபண்ணாமல் விடப்படவேண்டிய வயற்பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டங் கூடுதல்வேண்டும்: ஆனால் தண்ணீர்க்குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப்பற்றி இப்படிக் கூடிய கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்துகொள்ளக்கூடியதாயிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்ய அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்டவருக்கு அதிகாரமுண்டு தொடக்கத்தில் நீர்ப்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடாப்பின் காணிக்காரர் அல்லது குத்தகைகாரரெல்லாரும் விசாலத்திற் குறைக்கப்பட்ட இடாப்பின் தத்தமக்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கைபண்ண உரித்துடையவராவர். 6 ம், 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிக்கப்பட்டவண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அறிவித்தல்கள் ஒட்டுவதாலும், அல்லது வேறு தகைமாதிரிகளாலும், 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களின்படி கூடியகூட்டத்தின் தீர்மானங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசுரஞ்செய்விப்பார். சொந்தக்காரர் யாவரும் கூட்டத்தின் தீர்மானங்களின்படி செய்யக் கடமைப்பட்டவர்களாவார்கள். ஆனால், போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமாயிராவிட்டால் கூட்டத்தைத் தவணைபோட அல்லது 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத் தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவர் தகுதியுள்ளவராயிருப்பர். அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப்போலப் பெலட்புடையதாயிருக்கும்.

9. 6 (1) b ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைகாரனும் தங்களின் வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைக்காரர் வேளாண்மைக்காரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டைவிதானைக்குக் கொடுக்கவேண்டியது. இவ்விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் கொடுக்கப்படும் அச்சுக கடுதாசியில் எழுதப்பட்டு சொந்தக்காரனுடையவும், முல்லைக்காரனுடையவும், செய்கைக்காரனுடையவுங் கையொப்பங்களையும் அல்லது இரண்டு சாட்சிகள் முகதாவில் இடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதாயிருக்கவேண்டும். இந்த அச்சுக்கடுதாசியில் வேண்டிய விபரங்களெல்லாஞ் சரியாய் நிரப்பப்பட வேண்டும். பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள். இந்த இடாப்பு கொடுத்த நாள் தொடக்கம் முல்லைக்காரனும், செய்கைக்காரரும், சொந்தக்காரரும், குத்தகைக்காரரும் வேளாண்மைச் செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவார்கள். போதிய நியாயமின்றி கவலையீனம் அல்லது தவறு நடப்பின் அவர்களோர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னொருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதனமில்லாதிருக்கும்போது யாதும பிசகு உண்டானால், முந்திய வருட வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்தவரிடமிருந்து இடாப்பு ஏற்கப்படும் வட்டைவிதானை இடாப்பை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் புறநீங்கலாக) இடாப்பில் கையொப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்.

11. எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணமில்லையென்று காணப்படுமாகில், அதைப்பற்றி வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கை நீக்கிவிடலாம் அல்லது அக்காணியின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால் வேறொரு சொந்தக்காரனையேனும் குத்தகைக்காரனையேனும் அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் இல்லாவிடத்து அப்பங்கைச் செய்கைபண்ணவிடும்படி கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கைச் செய்கைபண்ண விடலாம். இவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் அம்முறைச் செய்கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைகளெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் அல்லது குத்தகைகாரனால தனது காணி செய்கைபண்ணப்படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்களெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

12. எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைகாரனாவது 6 ம் பிரிவின்கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கிவிடப்பட்டாலன்றி, போகவேளாண்மைக்கு இப்பிரமாணங்களின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைகாரனாவது ஏதும் வேலைசெய்ய வேண்டியவனாயிருந்து அதைச் செய்யத் தவறினால், அவ்வேலை செய்வதற்கு மதித்த தொகையை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் எழுத்துமூலமாய் அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் நீர்ப்பாய்ச்சல குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்த சென்ற செலவு இவ்வளவென்று அறிவிப்பார். 1917 ம் ஆண்டின் 45 ம இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் (Director of Irrigation) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும் அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனினது திருப்திக்கேற்க எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

14. பட்சிகள் அல்லது காட்டு மிருகங்கள் வந்தொதுங்கக்கூடிய மரங்கள் அல்லது குறுங்காடுகள் ஊரவர்களின் தரைக்குளிருந்தால், சொந்தக்காரர்களினால் அல்லது குத்தகைக்காரர்களினால் அவைகள் அகற்றப்பட வேண்டும்.

15. பழைய வழக்கமுறையின்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும் தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக்கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்க வேண்டும். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்படவேண்டும்.

16. தண்ணீர் குளக்கட்டிலிருந்து வெளியாகி வட்டைகளுக்கு வந்தபின் அந்தத் தண்ணீர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அதிகாரத்துக்கு அமைவாக வட்டைவிதானையாற் பகிர்ந்துகொடுக்கப்படும் வட்டைவிதானை தன்னுடைய வட்டைக்குள் தண்ணீர் விடப்படவேண்டிய காலத்தில் தண்ணீர் ஓடுவதைத் தடுக்கக்கூடிய (நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் பொறுப்பில்லாத) வரம்புக்கட்டைதையும் வெட்டுவிக்கலாம். நீர்ப்பாய்ச்சற்பகுதித் தலைவரின் பொறுப்பில்லாத எவ்வாய்க்கால்வழியேயும் அவ்வட்டைக்கு போகவேண்டிய தண்ணீர் வெளியே ஓடுமாகில் அவ்வாய்க்கால்களை அவர் மூடுவிக்கலாம் அக்காலத்தில் மாத்திரமன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச் சேராத வரம்புக்கட்டுகளுக்கு அல்லது வாய்க்கால்களுக்கு அவன் ஒன்றும் செய்யப்படாது.

17. எவரும் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிகளுக்குப் பாயுந் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால், அல்லது மேடான பூமிகளிலிருந்து வரும் மிச்சத்தண்ணீரைத் தடைப்படுத்தினால், அல்லது பொதுவாய் வட்டைகளுக்குள் தண்ணீர் பங்கிடுசெய்வதில் எவ்விதமேனும் தலையிட்டால் வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடங்களுக்குப் போய், தானே அப்படியான வக்கடைகளைத் திறத்தல் அல்லது தடைகளைத் துப்பரவுபண்ணல் முதலியன செய்யவேண்டும். வட்டைவிதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிடவும் அதைத் தடைப்படுத்தவும் வேறுவழியாய்த் தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறுவிதமாகப் பாவிக்கவுங்கூடாது.

18. வட்டை விதைத்து மூன்று நாட்களுக்குள் வட்டைவிதானை முழு வேலியையும் அளந்து ஒவ்வொரு காணிக்காரரின் செய்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு காணிக்காரனுடைய பங்கு வீதப்படி பிரிவிட்டுக் கொடுக்கவேண்டும். பிரிவிடப்பட்ட வேலி காணிக்காரனின் வயலுக்கருகில் இல்லாமலுமிருக்கலாம். அவ்விதமாய்ப் பிரித்துக் கொடுத்தபின் ஒவ்வொரு காணிக்காரனின் செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்த வேலியில் நீளத்தைக்காட்டும் ஒரு இடாப்பை வட்டைவிதானையுடனே பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அனுப்பவேண்டும். அவர் அதைப் பின் தேவைப்படும்போது பார்க்கிறதற்குக் கட்டிவைத்திருத்தல் வேண்டும். புதுக்கம்புகள் தேவையாயிருந்தால் வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும். அதன்பின் அவர் வட்டைவிதானை பேரில் கம்புகள் வெட்டுவதற்கு அவருக்கு ஒரு லைசென்ஸ் பத்திரம் வாங்கிக்கொடுப்பார்.

19. 6 ம் பிரமாணத்துக்கமைவாகக் கூடிய கூட்டத்தில் தீர்மானஞ்செய்த திகதிக்குள் செய்கைக்காரர்கள் வேலியை முடித்து தேவையான காவல்குடிகள் வைக்கவேண்டியது அல்லாமல் ஒவ்வொரு செய்கைக்காரரும் வேலிகளையும் காவல் குடில்களையும் நல்ல நிலைபரத்தில் வைத்து வட்டைவிதானை கட்டளைப்படி ஒழுங்கான காவல் காக்கவேண்டும். திறமையில்லாதவர்களையும் பதினறு வயதுக்குட்பட்டவர்களையும் காவலாளிகளாய் வைக்கப்படாது.

20. இரவில் வட்டைவிதானை அல்லது வட்டைகாவலன் வட்டைசுற்றிப் போகும்போது முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் வெளிச்சத்துடன் அவர்களோடு கூடப்போகவேண்டும் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல வன்னியன் தேவையில்லையென்று எண்ணும்வரைக்கும் இவ்விதம் நடைபெறவேண்டும்.

21. என்னகாரணத்தாலாகுதல் வட்டையில் ஏதும் ஒரு பங்கு மற்றப்பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால், செய்கைக்காரர்கள் அப்பங்கை வெட்டிச் சூடுவைக்க விடலாம். ஆனால் வட்டைவிதானையுடைய உத்தரவின்றி நெல்லு அடித்து முழுவதையும் வெளியே கொண்டுபோக விடப்படமாட்டாது. அவர்கள் வட்டையிலிருந்து மற்ற வேளாண்மை முழுதும் வெட்டிச் சூடாக்கும்வரையில் வட்டையைக் காவல்பார்த்த வேலியையும் பத்திரப்படுத்த வேண்டும். 6 ம், 7 ம பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின், காலம்பிந்தி விதைத்ததினால் அல்லது கூட்டத்தில் தீர்மானஞ்செய்த நெல்லைத்தவிர வேறு விதமான நெல் விதைத்ததினால், வட்டையில் எப்பகுதியாவது விளையாமல் இருந்தால்: மற்றப்பகுதியின் செய்கைக்காரர் அப்பூமி விளையும்வரையில் வேலியைப் பத்திரப்படுத்த அல்லது காவல்காக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கமாட்டார்கள்.

22. வேளாண்மை வெட்டிமுடிந்தபின் வேலியைப் பிடுங்கித் தடிகளைத் தான கட்டளையிடும் இடத்தில் குவித்துவைக்கும்படி வட்டைவிதானை செய்கைக்காரருக்குக் கட்டளை செய்யவேண்டும். சொந்தக்காரர்கள் வட்டைவிதானை சம்மதத்துடன் வயல்களிலிருந்து தடிகளை கொண்டுபோகலாம். ஆனால், அவர்கள் கொண்டுபோகுந் தடிகளுக்கு வட்டைவிதானைக்குப் பற்றிச்சீட்டுக்கொடுத்து, மறுபோகச் செய்கைக்கு வேளாண்மை செய்தாலுஞ் செயயாவிட்டாலுந் திருப்பிக் கொடுக்கவேண்டும். அல்லது அவைகளின் மதிப்புவிலை கொடுப்பதற்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள்.

23. எல்லாச் செய்கைக்காரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் துப்பரவுபண்ணிப் பெலனை கட்டைவேலி கட்டவேண்டும், அங்கேதான் சூடுகள் வைக்கவேண்டும். செய்கைக்காரர் தங்கள் முறைப்படி வேளாண்மைவெட்டி முடிந்த திகதி தொடக்கம் இரண்டு மாதம் வரைக்கும் சூட்டைக் காவல்காக்கவேண்டும்.

24. வேளாண்மைச் செய்கை முடிந்தபின் 4 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான கூலியும், மாட்டுக்கூலியும், மற்றுஞ் செய்கைக்கடங்கிய கொடுக்குமதிகளெல்லாம் இறுபடமுன் யாதொரு நெல்லும் வயலிலிருந்து கொண்டுபோகப்படலாகாது. பங்குக்குச் செய்கைபண்ணினால் வயற் சொந்தக்காரனுக்குப் போமதியானவைகள் கொடுத்துத் தீருமட்டும் நெல்லைக் கொண்டுபோகப்படாது.

நெல்லைக் களத்தில் வைக்கிறதினால் நெல்லுக்கு அதிக பழுதுவருமென்று கண்டால், சொந்தக்காரன், அல்லது செய்கைக்காரன், ஆராயிருந்தாலுஞ் சரி, தான் கொடுக்குமதியான மற்ற ஆட்களுடைய உத்தரவுப்படி நெல்லைக் கொண்டுபோகலாம். அல்லது அப்படியான உத்தரவு கொடுக்கப்படாவிட்டால் தான் கொடுக்குமதியான நெல்லை களத்தில் வைக்க அவன் பாத்திரனுவான் மிகுதியை அவன் கொண்டுபோகலாம்.

25. நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் பொறுப்பிலில்லாத எல்லா வயல் வாய்க்கால்களும், நீர்க்கால்களும், பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கீழிருக்கும் வட்டைவிதானை பொறுப்பிலிருக்கும். எவனாவது அப்படியான வாய்க்கால்களையாவது, நீர்க்கால்களையாவது அவைகளுக்காக விடப்பட்ட நிலத்தையாவது மூடவேனும் கூட்டிப் பிடிக்கவேனும்படாது.

26. காணிக்குள் அல்லது வெளியே புது வாய்க்கால, வரம்பு அல்லது வேறு கட்டு வேலைகள் தேவையெனக் கண்டால், 13 ம் பிரமாணத்திற் சொல்லியபடி நயம்பெறுங் காணிக்காரரால் தங்கள் தங்களுடைய பங்குவீதப்படி அவைகள் திறக்கப்படவேண்டும். நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவருடைய (Dierctor of Irrigation) பொறுப்பிலிருக்கும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் கீழ் அவ்வகைக் கட்டுவேலைகளைக் கட்டுவதற்கு உத்தரவு கேட்கும் கேள்விகள் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனிடம் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனிடம் எழுத்தில் கேட்கப்பட வேண்டும்

செய்யப்படவேண்டிய வேலையை நடத்துவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் சொந்தக்காரருக்கு பொதுவாக உத்தரவு கொடுக்கலாம். அல்லது உத்தரவு கொடுக்க மறுக்கலாம், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அபிப்பிராயப்படி செய்யக்கேட்ட வேலையானது நீர்ப்பாய்ச்சல் ஒழுங்கின்படி பொதுவான நீர்ப்பாய்ச்சலுக்கு இடையூறாய் அல்லது கேட்ட கேள்விக்காரரையொழிந்த மற்றக்காணிச் சொந்தக்காரருக்கு நட்டமானதாயிருக்குமென்றால் அவ்விண்ணப்பப்பத்திரங்களை அவர் அரசாட்சி ஏசண்டருக்குத் தன்னுடைய அறிக்கைப்பத்திரத்தோடு அனுப்பவேண்டும்.

செய்யப்படவிருக்கும் கட்டுவேலை எந்தச் சொந்தக்காரர்களின் காணிகளைத் தாக்குமோ அந்தச் சொந்தக்காரர்களின் நியாயங்களைக் கவனித்துப் பார்த்ததின்மேல் அரசாட்சி ஏசண்டர் அக்கேள்வி சார்வாய்க கவனிக்கப்படக் கூடியதென்று எண்ணுவாராகில் அவர் அதை நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீருக்கு அனுப்புவார். நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் அதை அங்கிகரித்துக்கொண்டால் உத்தரவு அளிக்கப்பட்டதென்று அவர் சொந்தக்காரருக்கு அறிவிப்பதுடன் அந்த வேலையைச் செய்யத் தொடங்குவதற்கு உதவிசெய்து அந்தக் கட்டுவேலையைச் செய்வதற்கு வேண்டிய யோசனையையும் சொல்லிக்கொடுப்பார்.

வயல் வாய்க்கால்களுக்கு நிலம் விடப்பட்டு அளந்து எல்லை அடையாளக்கட்டை நாட்டப்பட்ட புதுக்காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் தங்கள் காணிகளிருக்கும் கூட்டமான கண்டங்களை நீர்ப்பாய்ச்சல் செய்வதற்காய் படத்திலே காட்டப்பட்டிருக்கும் வயல் வாய்க்கால்களை பங்குவீதம் உண்டாக்கவேண்டும்.

அப்படியான எந்த வயல் வாய்க்காலும் நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் மெச்சிக்கொண்ட ஒழுங்குப்பிரகாரம் காணிச் சொந்தக்காரரால் உண்டாக்கப்பட வேண்டும்.

அப்படியான காணிச்சொந்தக்காரனெவனாவது மற்றெந்தச் சொந்தக்காரரும் தங்கள் வயல் வாய்க்கால் பங்குகளை வெட்டாத அசட்டையினிமித்தம் நீர்ப்பாய்ச்சலுக்குத் தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடாமலிருந்தால், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வேலையைச் செய்துமுடிக்கும்படி மற்றச் சொந்தக்காரருக்குக் கட்டளைபண்ண வேண்டும்.

27. தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அப்படியான வாய்க்கால்களுக்கும் கட்டுகளுக்கும் அல்லது மறுவேலைகளுக்கும் இடங்கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படுங் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளைச் செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிக்கு பதில்கொடுக்க அல்லது தங்கள் தங்கள் காணிகளுக்கு வந்த நயவீதம் நட்டத்தை இறுக்கவும் பாத்திரவாளிகளாவார்கள். கொடுக்கவேண்டிய நட்டம் நீர்ப்பாய்ச்சல் இஞ்சினீருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய ஆலோசனையுடன் அரசாட்சி ஏசண்டரால் தீர்மானிக்கப்படும்.

28. அரசாட்சி ஏசண்டர் குறித்த காலத்துக்குள் 13 ம், 19 ம், 26 ம் இலக்கப் பிரமாணங்களிற் சொல்லிய வேலைகளை எக்காணிக்காரரேனும் செய்யத்தவறினால், அது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் செய்யப்பட்டுச் சென்ற செலவும் தெரியப்படுத்தப்படும். இச்செலவு 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்திற் சொல்லியபடி அறவிடப்படும்.

29. ஒரு கண்டத்தில் இரண்டு வயல்களுக் கிடையிலுள்ள வரம்பையாகுதல் எல்லையையாகுதல் ஒருவரும் மாற்றவும் அல்லது அழிக்கவும படாது. அப்படி மாற்றினதை அல்லது அழித்ததை வட்டைவிதானை அறிந்தால் சொந்தக்காரர்களுக்கு அதனை அறிவித்தல்செய்து சாட்சிகளுடன் குறிக்கப்பட்ட இடத்துக்குப்போய் எல்லையைப் பழைய நிலைபரத்துக்குக் கொண்டுவருமபடி அவர்களைக் கேட்கவேண்டும். மூன்று நாட்களுக்குள் இவைகளைச் செய்யத் தவறுங்காலம் அவன் இதனைக் கிராமச்சங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

30. அரசாட்சியாரிடமாவது அல்லது மறுபேரிடமிருந்தாவது வாங்கப்பட்ட அல்லது இனிமேல் வாங்கப்படும் காணிகளின் சொந்தக்காரரும் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் குட்பட்டவர்களாவதுமன்றி, அவர்களின் காணிகள் தண்ணீர்பாய்ச்சக் கூடியதெனக் கண்டு நீர்வரி இடாப்பிற் சேர்க்கப்பட்டவுடன் எந்த வாய்க்கால் வழியாக அப்பூமிகளுக்குத் தண்ணீர்பாய்ச்சுதல் நயமாக விருக்கின்றதோ (நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவர் தண்ணீர் போதியதென்று கண்டால்) அந்த வாய்க்கால் வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உரித்துடையவர்களுமாவார்கள். மேற் சொல்லிய காணிகளின் சொந்தக்காரர்களும் செய்கைக்காரர்களும் வரிகளைப்பற்றிய காரியத்தைத்தவிர மற்றப்படிக்கு ஏற்கனவே நீர்ப்பாய்ச்சப்படும் சொந்தக்காரருக்கும் செய்கைக்காரருக்கும் உடைய விசேஷ சகாயங்களையும் உரித்துகளையும் அனுபவித்தல் வேண்டும்.

31. வேளாண்மைச் செய்கையைப்பற்றி எந்தக் காரியத்திலாவது காணிக்காரரின் ஆலோசனையும் உதவியுந் தேவையென்று அரசாட்சி ஏசண்டராவது சொந்தக்காரரின் அதிகப்பகுதியானவர்களாவது எண்ணுங்காலம், சொந்தக்காரரின் ஒரு கூட்டம் வைக்கப்படலாம்.

32. அரசாட்சி ஏசண்டராலும் காலத்துக்குக்காலம் நியமனம்பண்ணப்படும் உத்தியோகத்தர்களாலும் தலைமைக்காரர்களாலும் இப்பிரமாணங்கள் வலியுறுத்தப்படுவதுமன்றி இவைகளை மீறுவோர்கள் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி தண்டிக்கப்படுவதற்குப் பாத்திரர்களு மாவார்கள்.

33. கேட்கப்படும்போது எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய தரையின் சரியான எல்லைகளைக் காட்டவேண்டியதுமன்றி அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்சசல் வன்னியன் தேவையெனக் கண்டால் அவ்வெல்லைகளைக் குறிக்கும்படி வரம்புகள் அல்லது தகுந்த அடையாளங்கள் போடவேண்டும்,

34. சொந்தக்காரர்களும் இக்காரியத்திற் சம்பந்தமுடைய மற்றவர்களும் தங்கள் வயல்களில் சேதம்போகுந் தண்ணீருக்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள். இப்பிரமாணங்களால் தேவையாயிருக்கும் ஏதும் வேலையைக் காணிச் சொந்தக்காரராவது அல்லது செய்கைக்காரராவது செய்யத் தவறினதினிமித்தம் அளவுக்கு மேற்படியான தண்ணீர் தேவையாயிருந்தால், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தம் எண்ணப்படி தண்ணீரைத் தடுக்கவுந் திருப்பவும் முற்றாய்க் கொடுக்காமல்விடவும் அல்லது வேறு சரியெனக்காணும் விதஞ்செய்யவுங் கூடும். நீர்ப்பாய்ச்சல் அல்லது வேறு வாய்க்கால்களில் நெல் விதைக்கப்படாது.

35. நீர்வரிகொடாத காணிச் சொந்தக்காரர் பதிவுபெற்று நீர்ப்பாய்ச்சப்படுங் காணிகளுடன் கூட வேளாண்மைசெய்தால் அக்காணிகள் பொது வெலிக்குளிருக்குமிடத்து இதிற் சொல்லிய 14 ம், 15 ம், 17 ம், 18 ம், 19 ம், 20 ம், 21 ம், 22 ம், 23 ம், 24 ம், 25 ம், 26 ம் பிரமாணங்களைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள்.

36. வேளாண்மைச் செய்கைக்காலத்தில் தன்னுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில் அல்லது அதற்குச் சமீபமாகத் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக் கூடியதாய் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்கு வட்டைவிதானைக்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்தின்படி பிடிபட்ட ஆடுமாடுகளை கிராமக்கோட்டுக்கு முன்பாகக் கொண்டுபோவதற்கு தாமதமின்றி அவ்விடத்துப் பொலீஸ் தலைமைக்காரனுக்கு ஒப்புவித்தல் வேண்டும்.

37. செய்கைக்காரரை வேலைகொள்ளும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைக்காரனும் ஒரு புஸ்தகம் வைத்திருந்து தன் செய்கைக்காரருக்கு முற்றொகையாகக் கொடுத்த நெல்லை அல்லது பணத்தை கொடுத்த திகதிபோட்டு அப்புஸ்தகத்தில் பதிந்துவைக்கவேண்டும். அவர் தன் செய்கைக்காரரோடு மூன்று முறையாகிலும் கணக்குச் சரிபார்க்க வேண்டும். அதாவது, விதைப்பு முடிந்தவுடனும், வேளாண்மை வெட்டத்தொடங்கச் சற்றுமுன்னும், சூடுபோட்டபின்னும் கணக்குப்பார்த்து செய்கைக்காரர் அது சரியென்று ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய கையொப்பங்களை அல்லது பெருவிரலடையாளங்களைப் புஸ்தகத்தில் பதிந்த கணக்குக்கு கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்,

38. முந்திய பிரமாணங்கள் யாவும் இதனால் அழித்துவிடப்படுகின்றன.

## 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்.

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி மன்முனை தெற்கு நீர்ப்பாய்ச்சற் பிரிவிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகார மந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுர் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஸு ஏப்றில்மீ 30 ந் தேதி.

எவ். ஜி. றிரல்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

---

அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச்செய்கையைக் குறித்து 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 11 ம் பிரிவின்கீழ் மன்முனை தெற்கு நீர்ப்பாய்ச்சல் பகுதிக்கென்று உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 1922 ம் ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாச்சற் கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவின்கீழ் அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவார்கள்.

2. வட்டைவிதானை என்பவன் ஒரு வட்டை வயற்பகுதி அல்லது பகுதிகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கக்கூடாது.

வட்டைகாவலன் என்பவன் வட்டை விதானையின் உதவியாளன். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டை காவலனை அல்லது பல வட்டை காவலரை நியமனஞ் செய்யலாம்.

வட்டை காவலரின் தவறுகளுக்கு வட்டை விதானையே பொறுப்பாளியாவான்.

வட்டை விதானைமாரும், வட்டை காவலரும் வேளாண்மை காலத்தில் கூடுமானல் தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்கவேண்டும். அவர்கள் வேளாண்மைச் செய்கைகாலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக்காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது வட்டையை விட்டு விலகக்கூடாது.

வட்டைவிதானை சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துக்கு அமைவாக காணிக்காரரால் தெரிவுசெய்யப்படுவான். ஆனல் நியமனமாய்த் தெரிவுசெய்யப்படும் வரைக்கும் அரசாட்சி ஏசண்டர் ஒருவனைக் கொஞ்சக்காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானைமார் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர்பொறுப்பின்கீழ் தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வையிடுவார்கள். அவர் இப்பிரமாணங்களை யாவரும் கைக்கொள்ளும்படி செய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்குத் தொடரப்படும்படியாக அம்மீறுதல்களைக்குறித்துப் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிக்கவேண்டும்.

4. வட்டை விதானைமார் தங்கள் பங்காக செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவண விதைப்புக்கு ஒரு மரக்கால்வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். அத்துடன் வட்டை காவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரக்கால் வீதம் அவன் பங்காக மேலதிகம் வைக்கப்படவேண்டும். ஒரு வட்டைகாவலனுக்கு மேல் நியமிக்கப்பட்டிருந்தால், அந்தப்பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிக்கப்படும். நெல்லு களத்திலிருந்து கொண்டுபோகப்படுவதற்கு முன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானையும் வட்டைகாவலனும் பற்றுசீட்டுக் கொடுக்க வேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுப்பங்கை அல்லது அதிலே யாதுமொரு பாகத்தைக் கொடாதபடி தடுக்கலாம். தேவையெனக் காணில் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டை விதானை அல்லது வட்டை காவலனுக்காக வேலை பார்த்தவருக்குக் கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்சற் குற்றப்பணநிதியுடன் சேர்த்துவிடலாம் வட்டை விதானைக்கு அல்லது வட்டை காவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கப்பட்ட பங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்றுக்கொள்ள ஒருவனை அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் சம்பளத்துக்குமாக தடுக்கப்பட்ட பங்கின் ஒருபகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவுசெய்யலாம். இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவண விதைப்புத் தரை மூன்று ஏக்கர் விசாலமுடையதாகக் கணிக்கப்படும் விளைவில் வட்டை விதானைக்கும வட்டை காவலனுக்குமுடைய பங்கு வேளாண்மை வெட்டி முடிந்து நாலு மாதத்துக்குள் கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க் கொடுக்கப்படவேண்டும். அவ்வக்காலங்களின் அந்தந்த ஊர்களிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிக்கப்படும்.

5. வேளான்மைகாலம் சமீபிக்கும்போது அது முன்மாரி. காலவேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும காணிக்காரர் எல்லாருஞ்சேர்ந்து ஒரு சங்கம் கூட்டவேண்டும். இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம்பெற்ற இன்னொருவர் சபாநாயகமாயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்டவரால் சங்கம் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம் தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை ஏழு நாட்களுக்குமுன் விளம்பரஞ்செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.—

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருக்கு, சொல்லிய கருமங்களில் ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன:—

(a) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.
(b) இடாப்புக் கொடுத்தலுக்கு உவந்த திகதிகள்.
(c) வேலியடைத்து முடிப்பதற்கு உவந்த திகதிகள்.
(d) செய்கைபண்ண வேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேற்சொல்லிய திகதிகள் நியமிக்கப்படவேண்டும்.

(ii) கீழே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ்செய்வார்கள், அவையாவன:—

(e) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்படவேண்டுமென்பதையும்.
(f) செய்கைபண்ணும் விதம்.
(g) ஒவ்வொரு வட்டையிலும் விதைபடவேண்டிய நெற்சாதியம்.
(h) வேளாண்மைகாலத்தில் பசுமாடுகளும், எருமை மாடுகளுங் கட்டப்படவேண்டிய இடமும் மாதிரியும்.
(i) வேளாண்மைக் கடமைகளிலிருந்து தங்களை விலக்கக்கேட்கும் காணிக்காரர்களுடைய கேள்விகளைக் கவனிப்பதும்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளான்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமிக்கப்பட்ட விசாலஞ் செய்கைபண்ணுவதற்குப் போதிய தண்ணீர் இல்லாமலிருந்தால், 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்யவேண்டிய தேதிகளில் ஏதும் மாற்றங்கள் வேண்டுமோவென்றும் தண்ணீர்க் குறைவின் நிமித்தம் செய்கைபண்ணமல் விடப்படவேண்டிய வயற்பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டங் கூடுதல்வேண்டும் ஆனல் தண்ணீர்க் குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப்பற்றி இப்படிக் கூடிய கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்துகொள்ளக்கூடியதாயிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டுமென்று தீர்மானஞ்செய்ய அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்டவருக்கு அதிகாரமுண்டு. தொடக்கத்தில் நீர்ப்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடப்பரப்பின் காணிக்காரர் அல்லது குத்தகைகாரரெல்லாரும் விசாலத்திற் குறைக்கப்பட்ட இடப்பரப்பின் தத்தமக்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கைபண்ண உரித்துடையவராவர். 6 ம், 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிக்கப்பட்டவண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அவித்தல்கள் ஒட்டுவதாலும், அல்லது வேறு தக்கமாதிரிகளாலும், 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களின்படி கூடிய கூட்டத்தின் தீர்மானங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசாஞ் செய்விப்பார். சொந்தக்காரர் யாவரும் கூட்டத்தின் தீர்மானங்களின்படி செயயக் கடமைப்பட்டவர்களாவார்கள். ஆனல் போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமாயிராவிட்டால் கூட்டத்தை தவணைபோட அல்லது 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத்தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம்பெற்றவர் தகுதியுள்ளவராயிருப்பர். அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப்போலப் பெலப்புடையதாயிருக்கும்.

9. (i) (b) ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைகாரனும் தங்களின் வயலில் வேலை செய்யப்போகிற முல்லைக்காரர் வேளாண்மைகாரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டை விதானைக்குக் கொடுக்கவேண்டியது. இவ்விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனல் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனல் கொடுக்கப்படும் அச்சக்

கடுதாசியில் எழுதப்பட்டுச் சொந்தக்காரனுடையவும், முல்லைக்காரனுடையவும், செய்கைக்காரனுடையவும் கையொப்பங்களையும் அல்லது இரண்டு சாட்சிகள் முகதாவிலிடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதா யிருக்கவேண்டும். இந்த அச்சுக்கடுதாசியில் வேண்டிய விபரங்க ளெல்லாஞ் சரியாய் நிரப்பவேண்டும். பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள். இந்த இடாப்புக கொடுத்த நாள் தொடக்கம் முல்லைக்காரனும், செய்கைக்காரரும், சொந்தக்காரரும், குத்தகைக்காரரும் வேளாண்மைச் செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவார்கள். போதிய நியாயமின்றி கவலையீனம் அல்லது தவறுநடப்பின் அவர்களோர் அடாத்துச்செய்த குற்றமுடையவ ராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னொருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதனமில்லாதிருக்கும்போது யாதும் பிசகு உண்டானால் முந்திய வருட வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்தவரிடமிருந்து இடாப்பு ஏற்கப்படும். வட்டைவிதானை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் பிறநீங்கலாக) இடாப்பில் கையொப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்.

11. எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணவில்லையென்று காணப்படுமாகில், அதைப்பற்றி வட்டை விதானை பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக் காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கை நீக்கிவிடலாம் அல்லது அக்காணியின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால் வேறொரு சொந்தக்காரனையேனும் குத்தகைக்காரனையேனும் அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் இல்லாவிட்டது அப்பங்கைச் செய்கைபண்ண விரும்பிப்படி கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கைச் செய்கைபண்ண விடலாம். இவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் அம்முறைச் செய் கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைகளெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறுசொந்தக்காரனால் அல்லது குத்தகைக்காரனால் தனது காணி செய்கைபண்ணப்படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்களெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

12. எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது 6 ம் பிரிவின்கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கிவிடப்பட்டாலன்றி, போக வேளாண்மைக்கு இப்பிரமாணங்களின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது ஏதும் வேலைசெய்ய வேண்டியவனாயிருந்து அதைச் செய்யத்தவறினால், அவ்வேலைசெய்வதற்கு மதித்த தொகையை பிரதானநீர்ப்பாய்ச்சற்தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச் சல் வன்னியன் எழுத்துமூலமாய் அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் நீர்ப்பாய்ச்சல் குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும். பிரதானநீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்து சென்ற செலவு இவ்வளவென்று அறிவிப்பார். 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகா ரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் (Director of Irrigation) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக் காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும். அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனினது திருப்திக்கேற்ற எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

14. பட்டிகள் அல்லது காட்டு மிருகங்கள் வந்தொதுங்கக்கூடிய மரங்கள் அல்லது குறுங்காடுகள் ஊரவர்களின் தரைக்குளிருந்தால், சொந்தக் காரர்களினால் அல்லது குத்தகைக்காரர்களினால் அவைகள் அகற்றப்படவேண்டும்.

15. பழைய வழக்கமுறையின்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும் தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக்கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக் காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக்கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப் படும் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்,

16. தண்ணீர் குளக்கட்டிலிருந்து வெளியாகி வட்டைகளுக்கு வந்தபின் அந்தத் தண்ணீர் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அதிகாரத்துக்கு அமைவாக வட்டைவிதானையாற் பகிர்ந்து கொடுக்கப்படும். வட்டை விதானை தன்னுடைய வட்டைக்குள் தண்ணீர் விடவேண்டிய காலத்தில் ஓடுவதைத் தடுக்கக்கூடிய (நீர்ப்பாய்ச்சற்பகுதித் தலைவரின் பொறுப்பில்லாத) வரம்புக்கட்டையும் வெட்டுவிக்கலாம் நீர்ப்பாய்ச்சற்பகுதித் தலைவரின் பொறுப்பில் இல்லாத எவ்வாய்க்கால்வழியேனும் அவ்வட்டைக்குள் போகவேண்டிய தண்ணீர் வெளியே ஓடுமாகில் அவ்வாய்க்கால்களையும் அவர் மூடுவிக்கலாம். அக்காலத்தில் மாத்திரமன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச்சேராத வரம்புக்கட்டுகளுக்கு அல்லது வாய்க்கால்களுக்கு அவன் ஒன்றும் செய்யப்படாது.

17. எவரும் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிகளுக்குப் பாயுந் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால், அல்லது மேடான பூமிகளி லிருந்து வரும் மிச்சத்தண்ணீரைத் தடைப்படுத்தினால் அல்லது பொதுவாய் வட்டைகளுக்குள் தண்ணீர் பங்கிடுசெய்வதில் எவ்விதமேனும் தலையிட்டால் வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடங்களுக்குப் போய், தானே அப்படியான வட்டைகளைத் திறத்தல் அல்லது தடைகளைத் துப்பரவுபண்ணல் முதலியன செய்யவேண்டும். வட்டை விதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிடவும் அதைத் தடைப்படுத்தவும் வேறு வழியாய்த்தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறுவிதமாகப் பாவிக்கவுங்கூடாது.

18. வட்டைவிதைத்த மூன்று நாட்களுக்குள் வட்டைவிதானை முழுவேலியையும் அளந்து ஒவ்வொரு காணிக்காரரின் செய்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு காணிக்காரனுடைய பங்கு வீதப்படி பிரிவிட்டுக் கொடுக்கவேண்டும். பிரிவிடப்பட்ட வேலி காணிக்காரனின் வயலுக்கருகில் இல்லாமலு மிருக்கலாம். அவ்விதமாய்ப் பிரித்துக்கொடுத்தபின் ஒவ்வொரு காணிக்காரனும் செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்த வேலியில் நீளத்தைக் காட்டும் ஒரு இடாப்பை வட்டை விதானை உடனே பிரதான நீர்ப்பாய்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அனுப்பவேண்டும். அவர் அதைப் பின் தேவைப்படும்போது பார்க்கிறதற்குக் கட்டி வைத்திருத்தல் வேண்டும். புதுக்கம்புகள் தேவையாயிருந்தால் வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும். அதன்பின் அவர் வட்டைவிதானை பேரில் கம்புகள் வெட்டுவதற்கு அவருக்கு ஒரு லைசென்ஸ் பத்திரம் வாங்கிக்கொடுப்பார்.

19. 6 ம் பிரமாணத்துக்கமைவாகக் கூடிய கூட்டத்தில் தீர்மானஞ்செய்த திகதிக்குள் செய்கைக்காரர்கள் வேலியை முடித்து தேவையான காவல்குடிகள் வைக்கவேண்டியது மல்லாமல் ஒவ்வொரு செய்கைக்காரனும் வேலிகளையுங் காவல் குடில்களையும் நல்ல நிலைபரத்தில் வைத்துவட்டை விதானை கட்டளைப்படி ஒழுங்கான காவல்காக்கவேண்டும். திறமையில்லாதவர்களையும் பதினாறு வயதுக்குட்பட்டவர்களையும் காவலாளிகளாய் வைக்கப் படாது.

20. இரவில் வட்டை விதானை அல்லது வட்டை காவலன் வட்டை சுற்றிப்போகும்போது முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் வெளிச்சத் துடன் அவர்களோடு கூடப்போகவேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையில்லையென்று எண் ணும் வரைக்கும் இவ்விதம் நடைபெறவேண்டும்.

21. என்ன காரணத்தாலாகுதல் வட்டையில் ஏதமொரு பங்கு மற்றப்பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால், செய்கைக்காரர்கள் அப் பங்கை வெட்டிச் சூடுவைக்க விடலாம். ஆனால் வட்டைவிதானையுடைய உத்தரவின்றி நெல்லு அடித்து முழுவதையும் வெளியே கொண்டு போகப்படமாட்டாது. அவர்கள் வட்டையிலிருந்து மற்ற வேளாண்மை முழுதும் வெட்டிச் சூடாக்கும் வரையில் வட்டையைக்காவல் பார்த்து வேலியையும் பத்திரப்படுத்தவேண்டும். 6 ம், 7 ம் பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின், காலம்பிந்திவிதைத்த தினால் அல்லது கூட்டத்தில் தீர்மானஞ்செய்த நெல்லைத்தவிர வேறு விதமான நெல் விதைத்ததினால், வட்டையில் எப்பகுதியாவது விளையாமல் இருந்தால், மற்றப்பகுதியின் செய்கைக்காரர் அப்பூமி விளையும்வரையில் வேலியைப்பத்திரப்படுத்த அல்லது காவல்காக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கமாட்டார்கள்.

22. வேளாண்மை வெட்டிமுடிந்தபின் வேலியைப் பிடுங்கித் தடிகளைத் தான் கட்டளையிடும் இடத்தில் குவித்துவைக்கும்படி வட்டை விதானை செய்கைக்காரருக்குக் கட்டளை செய்ய செய்யவேண்டும். சொந்தக்காரர்கள் வட்டைவிதானை சம்மதத்துடன் வயல்களிலிருந்து தடி களை கொண்டுபோகலாம். ஆனால், அவர்கள் கொண்டுபோகுந் தடிகளுக்கு வட்டைவிதானைக்குப் பற்றுச்சீட்டுக்கொடுத்து, மறுபோகச் செய் கைக்கு வேளாண்மை செய்தாலுஞ் செய்யாவிட்டாலுந் திருப்பிக் கொடுக்கவேண்டும். அல்லது அவைகளின் மதிப்புவிலை கொடுப்பதற்குப் பாத்திர வாளிகளாயிருப்பார்கள்.

23. எல்லாச் செய்கைக்காரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் துப்பரவுபண்ணிப் பெலனான கட்டைவேலி கட்டவேண்டும். அங்கேதான் சூடு கள் வைக்கவேண்டும். செய்கைக்காரர் தங்கள் முறைப்படி வேளாண்மை வெட்டி முடிந்த திகதி தொடக்கம் இரண்டு மாதம் வரைக்கும் சூட்டைக் காவல்காக்கவேண்டும்.

24. வேளாண்மைச் செய்கை முடிந்தபின் 4 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான கூலியும், மாட்டுக்கூலியும் மற்றுஞ் செய் கைக்கடங்கிய கொடுக்குமதிகளெல்லாம் இறுபடமுன் யாதொரு நெல்லும் வயலிலிருந்து கொண்டுபோகப்படலாகாது பங்குக்குச் செய்கை பண்ணினால் சொந்தக்காரனுக்குப் போமதியானவைகள் கொடுத்துத் தீருமட்டும் நெல்லைக் கொண்டுபோகப்படாது,

நெல்லைக் களத்தில் வைக்கிறதினால் நெல்லுக்கு அதிக பழுதுவருமென்று கண்டால், சொந்தக்காரன், அல்லது செய்கைக்காரன், ஆராயிருந்தாலுஞ் சரி. தான் கொடுக்குமதியான மற்ற ஆட்களுடைய உத்தரவுப்படி நெல்லுக் கொண்டுபோகலாம். அல்லது அப்படியான உத்தரவு கொடுக்கப்படாவிட் டால் தான் கொடுக்குமதியான நெல்லை களத்தில்வைக்க அவன் பாத்திரனாவான் மிகுதியை அவன் கொண்டுபோகலாம்.

25. நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் பொறுப்பிலில்லாத எல்லா வயல் வாய்க்கால்களும், நீர்க்கால்களும், பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்கார னுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கீழிருக்கும் வட்டைவிதானை பொறுப்பிலிருக்கும் எவனாவது அப்படியான வாய்க்கால்களையாவது, நீர்க் கால்களையாவது அவைகளுக்காக விடப்பட்ட நிலத்தையாவது மூடவேனும் கூட்டிப் பிடிக்கவேனும் படாது.

26. காணிக்குள் அல்லது வெளியே புதுவாய்க்கால், வரம்பு அல்லது வேறு கட்டுவேலைகள் தேவையெனக் கண்டால், 13 ம் பிரமாணத்திற் சொல்லியபடி நயம்பெறுங் காணிக்காரரால் தங்கள் தங்களுடைய பங்குவீதப்படி அவைகள் திறக்கப்பட வேண்டும். நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவருடைய (Director of Irrigation) பொறுப்பிலிருக்கும் நீர்ப்பாச்சல் வேலைகளின்கீழ், அவ்வகைக் கட்டுவேலைகளைக் கட்டுவதற்கு உத்தரவு கேட்கும் கேள்விகள் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனிடம் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனிடம் எழுத்தில் கேட்கப்படவேண்டும்.

செய்யப்படவேண்டிய வேலையை நடத்துவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் சொந்தக்காரருக்குப் பொதுவாக உத்தரவு கொடுக்கலாம். அல்லது உத்தரவு கொடுக்க மறுக்கலாம். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அபிப்பிராயப்படி செய்யக்கேட்ட வேலையானது நீர்ப்பாய்ச்ல் ஒழுங்கின்படி பொதுவான நீர்ப்பாய்ச்சலுக்கு இடையூறு அல்லது கேட்ட கேள்விக்காரரை யொழிந்த மற்றக்காணிச் சொந்தக்காரருக்கு நட்டமானதா யிருக்குமென்றால் அவ்விண்ணப்பப்பத்திரங்களை அவர் அரசாட்சி ஏசண்டருக்குத் தன்னுடைய அறிக்கைப்பத்திரத்தோடு அனுப்பவேண்டும்.

செய்யப்பட விருக்கும் கட்டுவேலை எந்தச் சொந்தக்காரர்களின் காணிகளைத்தாக்குமோ அந்தச் சொந்தக்காரர்களின் நியாயங்களைக் கவனித்துப் பார்த்ததின்மேல் அரசாட்சி ஏசண்டர் அக்கேள்வி சார்வாகக் கவனிக்கப்படக் கூடியதென்று எண்ணுவாராகில் அவர் அதை நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினியருக்கு அனுப்புவார். நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் அதை அங்கீகரித்துக்கொண்டால் உத்தரவு அளிக்கப்பட்டதென்று அவர் சொந்தக்காரருக்கு அறிவிப்பதுடன் அந்தவேலையைச் செய்யத் தொடங்குவதற்கு உதவிசெய்து அந்தக்கட்டு வேலையைச்செய்வதற்கு வேண்டிய யோசனையையும் சொல்லிக் கொடுப்பார்.

வயல் வாய்க்கால்களுக்கு நிலம் விடப்பட்டு, அளந்து எல்லை அடையாளக்கட்டை நாட்டப்பட்ட புதுக்காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் தங்கள் காணிகளிருக்கும் கூட்டமான கண்டங்களை நீர்ப்பாய்ச்சல் செய்வதற்காய் படத்திலே காட்டப்பட்டிருக்கும் வயல் வாய்க்கால்களை பங்குவீதம் உண்டாக்கவேண்டும்.

அப்படியான எந்த வயல் வாய்க்காலும் நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் மெச்சிக்கொண்ட ஒழுங்குப்பிரகாரம் காணிச் சொந்தக்காரரால் உண்டாக்கப்பட வேண்டும்.

அப்படியான காணிச்சொந்தக்கார னெவனுவது மற்றெந்தச் சொந்தக்காரரும் தங்கள் வயல் வாய்க்கால் பங்குகளை வெட்டாத அசட்டையினிமித்தம் நீர்ப்பாய்ச்சலுக்குத் தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடாமலிருந்தால், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்தவேலையைச் செய்துமுடிக்கும்படி மற்றச் சொந்தக்காரருக்குக் கட்டளை பண்ணவேண்டும்.

27. தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அப்படியான வாய்க்கால்களுக்கும் கட்டுகளுக்கும் அல்லது மறுவேலைகளுக்கும் இடங்கொடுக்கவேண்டும். ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படுங் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளைச் செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிக்கு பதல்கொடுக்க அல்லது தங்கள் தங்கள் காணிகளுக்கு வந்த நயவீதம் நட்டத்தை இறுக்கவும் பாத்திரவாளிகளாவார்கள். கொடுக்கவேண்டிய நட்டம் நீர்ப்பாய்ச்சல் இஞ்சினீருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய ஆலோசனையுடன் அரசாட்சி ஏசண்டரால் தீர்மானிக்கப்படும்.

28. அரசாட்சி ஏசண்டர் குறித்த காலத்துக்குள் 13ம், 19ம், 26ம் இலக்கப் பிரமாணங்களிற் சொல்லிய வேலைகளை எக்காணிக்காரரேனும் செய்யத்தவறினால், அது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் செய்யப்பட்டுச் சென்ற செலவும் தெரியப்படுத்தப்படும். இச்செலவு 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாயச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்திற் சொல்லியபடி அறவிடப்படும்.

29. ஒரு கண்டத்தில் இரண்டு வயல்களுக் கிடையிலுள்ள வரம்பையாகுதல், எல்லையையாகுதல் ஒருவரும் மாற்றவும் அல்லது அழிக்கவும் படாது அப்படி மாற்றினதை அல்லது அழித்ததை வட்டைவிதானை அறிந்தால் சொந்தக்காரர்களுக்கு அதனை அறிவித்தல் செய்து சாட்சிகளுடன் குறிக்கப்பட்ட இடத்துக்குப்போய் எல்லையைப் பழய நிலைபரத்துக்குக் கொண்டுவரும்படி அவர்களைக் கேட்கவேண்டும். மூன்றுநாட்களுக்குள் இவைகளைச் செய்யத் தவறுங்காலம் அவன் இதனைக் கிராமச் சங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

30. அரசாட்சியாரிடமாவது அல்லது மறுபேரிடமிருந்தாவது வாங்கப்பட்ட அல்லது இனிமேல் வாங்கப்படும் காணிகளின் சொந்தக்காரரும் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் குட்பட்டவர்களாவதுமன்றி அவர்களின் காணிகள் தண்ணீர்பாய்ச்சக் கூடியதெனக் கண்டு நீர்வரி இடாப்பிற் சேர்க்கப்பட்டவுடன் எந்த வாய்க்கால் வழியாக அப்பூமிகளுக்குத் தண்ணீர்ப்பாய்ச்சுதல் நயமாக விருக்கின்றதோ (நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவர் தண்ணீர் போதியதென்று கண்டால்) அந்த வாய்க்கால்வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உரித்துடையவர்களுமாவார்கள், மேற்சொல்லிய சொந்தக்காரர்களும் செய்கைக்காரர்களும் வரிகளைப்பற்றிய காரியத்தைத்தவிர மற்றப்படிக்கு ஏற்கனவே நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளின் சொந்தக்காரருக்கும் செய்கைக்காரருக்கும் உடைய விசேஷ சகாயங்களையும் உரித்துகளையும் அனுபவித்தல் வேண்டும்.

31. வேளாண்மைச் செய்கையைப்பற்றி எந்தக்காரியத்திலாவது காணிக்காரரின் ஆலோசனையும் உதவியுந் தேவையென்று அரசாட்சி ஏசண்டராவது சொந்தக்காரரால் அதிகப் பகுதியானவர்களாவது எண்ணுங்காலம், சொந்தக்காரரின் ஒரு கூட்டம் வைக்கப்படலாம்.

32. அரசாட்சி ஏசண்டராலும் காலத்துக்குக் காலம் நியமனம்பண்ணப்படும் உத்தியோகத்தர்களாலும் தலைமைக்காரர்களாலும் இப்பிரமாணங்கள் வலியுறுத்தப்படுவதுமன்றி இவைகளை மீறுவோர்கள் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி தண்டிக்கப்படுவதற்குப் பாத்திரர்களுமாவர்கள்.

33. கேட்கப்படும்போதெல்லாந் சொந்தக்காரனுவது தன்னுடைய தரையின் சரியான எல்லைகளைக் காட்ட வேண்டியதுமன்றி அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால் அவ்வெல்லைகளைக் குறிக்கும்படி வரம்புகள் அல்லது தகுந்த அடையாளங்கள் போடவேண்டும்.

34. சொந்தக்காரர்களும் இக்காரியத்திற் சம்பந்தமுடைய மற்றவர்களும் தங்கள் வயல்களில் சேதம்போகுந் தண்ணீருக்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள். இப்பிரமாணங்களால் தேவையாயிருக்கும் ஏதும் வேலையைக் காணிச் சொந்தக்காரராவது அல்லது செய்கைக்காரராவது செய்யத் தவறினதினிமித்தம் அளவுக்கு மேற்படியான தண்ணீர் தேவையாயிருந்தால், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தமெண்ணப்படி தண்ணீரைத் தடுக்கவுந் திருப்பவும் முற்றாய்க் கொடுக்காமல் விடவும் அல்லது வேறு சரியெனக் காணும் விதஞ் செய்யவுங் கூடும். நீர்ப்பாய்ச்சல் அல்லது வேறு வாய்க் கால்களில் நெல்விதைக்கப்படாது.

35. நீர்வரிகொடாத காணிச் சொந்தக்காரர் பதிவுபெற்று நீர்ப்பாய்ச்சப்படுங் காணிகளுடன் கூட வேளாண்மை செய்தால் அக்காணிகள் பொது வேலிக்குளிருக்குமிடத்து, இதிற் சொல்லிய 14 ம், 15 ம், 17 ம், 18 ம், 19 ம், 20 ம், 21 ம், 22 ம், 23 ம், 24 ம், 25 ம், 26 ம் பிரமாணங்களைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள்.

36. வேளாண்மைச் செய்கைக்காலத்தில் தன்னுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில் அல்லது அதற்குச் சமீபமாய்த் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக் கூடியதாய் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்கு வட்டைவிதானைக்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்தின்படி பிடிபட்ட ஆடுமாடுகளை கிராமக்கோட்டுக்கு முன்பாகக் கொண்டுபோவதற்கு தாமதமின்றி அவ்விடத்துப் பொலீஸ் தலைமைக்காரனுக்கு ஒப்புவித்தல் வேண்டும்.

37. செய்கைக்காரரை வேலைகொள்ளும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைக்காரனும் ஒரு புஸ்தகம் வைத்திருந்து தன் செய்கைக்காரருக்கு முற்தொகையாகக் கொடுத்த நெல்லை அல்லது பணத்தை கொடுத்த திகதிபோட்டு அப்புஸ்தகத்தில் பதிந்து அவர்களுடைய கையொப்பங்களை அல்லது பெருவிரலடையாளங்களைப் புஸ்தகத்தில் பதிந்த கணக்குக்குக் கீழ் எடுத்துக் கொள்ளவேண்டும்.

38. முந்திய பிரமாணங்கள்யாவும் இதனால் அழித்துவிடப்படுகின்றன.

---

### 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்.

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி எருவில் போரதிவு நீர்ப்பாய்ச்சற் பிரிவுவுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு, மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகாரமந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

என். ஜீ. ரியல்.
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

கலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு 1929 ம் ஸ்ரீல எப்பிறில்மீ 30 ந் தேதி.

### அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச் செய்கையைக்குறித்து 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 11 ம் பிரிவின்கீழ்

எருவிற்போரதிவு நீர்ப்பாய்ச்சற் பகுதிக்கென்று உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 1922 ம் ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 20A ம் பிரிவின்கீழ அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவார்கள்.

2. வட்டைவிதானை என்பவன ஒரு வட்டை, வயற்பகுதி அல்லது பகுதிகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கக்கூடாது.

வட்டை காவலன் என்பவன் வட்டைவிதானையின் உதவியாளன். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டைகாவலனை அல்லது பல வட்டைகாவலரை நியமனஞ் செய்யலாம்.

வட்டைகாவலரின் தவறுகளுக்கு வட்டைவிதானையே பொறுப்பாளியாவான்.

வட்டைவிதானைமாரும், வட்டைகாவலரும் வேளாண்மைகாலத்தில் கூடுமானல், தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்கவேண்டும் அவர்கள் வேளாண்மைச் செய்கை காலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது வட்டையைவிட்டு விலகப்படாது.

வட்டைவிதானை சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துக்கு அமைவாக காணிக்காரரால் தெரிவுசெய்யப்படுவான். ஆனால் நியமனமாய்த் தெரிவுசெய்யப்படும் வரைகரும், அரசாட்சி ஏசண்டர் ஒருவனைக் கொஞ்சக்காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானைமார் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர் பொறுப்பின்கீழ் தாங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வை யிடுவார்கள். அவர்கள் இப்பிரமாணங்களையாவரும் கைக்கொள்ளும்படிசெய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்கு தொடரும்படியாக அம்மீறுதலைக் குறித்துப் பிரதான நீர்ப்பாய்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிக்கவேண்டும்.

4. வட்டைவிதானைமார் தங்கள் பங்காக செய்கைகாரரிடமிருந்து ஒரு அவணவிதைப்புக்கு ஒருமரக்கால் வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். அத்துடன் வட்டைக்காவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரக்கால்வீதம் அவன் பங்காக மேலதிகம் வைக்கப்படவேண்டும். ஒரு வட்டைகாவலனுக்குமேல் நியமிக்கப்பட்டிருந்தால், அந்தப்பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிக்கப்படும். நெல்லு களத்திலிருந்து கொண்டுபோகப்படுவதற்குமுன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானையும் வட்டைகாவலனும் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுப்பங்கை அல்லது அதிலேதுமொரு பாகத்தைக் கொடாதபடி தடுக்கலாம். தேவையெனக் காணில் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானை அல்லது வட்டைகாவலனுக்காக வேலைபார்த்தவருக்குக் கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்சற் குற்றப்பண நிதியுடன் சேர்த்துவிடலாம். வட்டைவிதானைக்கு அல்லது வட்டைகாவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கபபட்ட பங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்றுக்கொள்ள ஒருவனை அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் சம்பளத்துக்குமாக தடுக்கப்பட்ட பங்கின் ஒருபகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவு செய்யலாம். இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவணவிதைப்புத் தரை இரண்டு ஏக்கர் விசாலமுடையதாகக் கணிக்கப்படும். விளைவில் வட்டைவிதானைக்கும் வட்டைகாவலனுக்குமுடைய பங்கு வேளாண்மை வெட்டிமுடிந்து நாலு மாதத்துக்குள கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க் கொடுக்கப்படவேண்டும். அவ்வக்காலங்களில் அந்தந்த ஊர்களிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிக்கப்படும்.

5. வேளாண்மைகாலம் சமீபிக்கும்போது அது முன்மாரி காலவேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் காணிக்காரர் எல்லாருஞ்சேர்ந்து ஒரு சங்கம் கூட்டவேண்டும். இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம்பெற்ற இன்னொருவர் சபாநாயகமாயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்டவரால் சங்கங் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம் தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை ஏழுநாட்களுக்குமுன் விளம்பரஞ் செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருக்கு, பின்சொல்லிய கருமங்களில் ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன:—

(a) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.

(b) இடாப்புக் கொடுத்தலுககு உவந்த திகதிகள்.

(c) வேலியடைத்து முடிப்பதற்கு உவந்த திகதிகள்.

(d) செய்கைபண்ணவேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேற்சொல்லிய திகதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(ii) கீழே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ் செய்வார்கள், அவையாவன:—

(e) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்பட வேண்டுமென்பதும்.

(f) செய்கைபண்ணும் விதம்.

(g) ஒவ்வொரு வட்டையிலும் விதைபடவேணடிய நெற்சாதியும்.

(h) வேளாண்மை காலத்தில் பசுமாடுகளும், எருமைமாடுகளுங் கட்டப்படவேண்டிய இடமும் மாதிரியும்.

(i) வேளாண்மைக் கடமைகளிலிருந்து தங்களை விலக்கக் கேட்கும் காணிக்காரர்களுடைய விண்ணப்பங்கள்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளாண்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமித்தப்பட்ட விசாலஞ் செய்கை பண்ணுவதற்குப் போதிய தணணீர் இல்லாமலிருந்தால் 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாய்ச்சல்பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்யவேண்டிய தேதிகளில் ஏதும் மாற்றங்கள் வேணடுமோ வென்றும் தண்ணீர் குறைவின் நிமித்தம் செய்கைபண்ணமல் விடப்படவேண்டிய வயற்பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டம் கூடுதல் வேண்டும். ஆனால், தண்ணீர்க் குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப்பற்றி இப்படிக் கூடிய கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்துகொள்ளக்கூடியதா யிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டுமென்று தீர்மானஞ்செய்ய அரசாட்சி ஏசணடருக்கு அல்லது அவரால் ஏறபடுத்தப்பட்டவருக்கு அதிகாரமுணடு தொடக்கத்தில் நீர்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடப்பரப்பின் காணிககாரர் அல்லது குத்தகைகார ரெல்லாரும் விசாலத்திற் குறைக்கப்பட்ட இடப்பரப்பின் தத்தமக்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கைபண்ண உரித்துடையவராவார். 6 ம், 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிக்கப்பட்ட வண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அறிவித்தல்கள் ஒட்டுவதாலும், அல்லது வேறு தக்கமாதிரிகளாலும், 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களின்படி கூடிய கூட்டத்தின் தீர்மானங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசரஞ்செய்விப்பார். சொந்தக்காரர்யாவரும கூட்டத்தின் தீர்மாணங்களின்படி செய்யக்கடமைப்பட்டவர்களாவார்கள். ஆனால், போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமாயிராவிட்டால் கூட்டத்தைத் தவணைபோட அல்லது 6 ம அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத் தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவர் தகுதியுள்ளவராயிருப்பார். அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப் போலப் பெலப்புடையதாயிருக்கும்.

9. 6 (i) (b) ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைகாரனும் தங்களின வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைக்காரர் வேளான்மைக்காரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டைவிதானைக்குக் கொடுக்கவேண்டியது இவ்விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் கொடுக்கப்படும் அச்சுக் கடதாசியில் எழுதப்பட்டு சொந்தக்காரனுடையவும், முல்லைக்காரனுடையவும், செய்கைக்காரனுடையவுங் கையொப்பங்களையும் அல்லது இரண்டு சாட்சிகள் முகதாவிலிடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதாயிருக்கவேணடும். இந்த அச்சுக்கடுதாசியில் வேணடிய விபரங்களெல்லாஞ் சரியாய் நிரப்பப்பட வேண்டும் பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள். இந்த இடாப்புக் கொடுத்த நாள் தொடக்கம் முல்லைக்காரனும், செய்கைக்காரரும், சொந்தக்காரரும், குத்தகைக்காரரும் வேளாண்மைச்செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவார்கள். போதிய நியாயமின்றிக் கவலையீனம் அல்லது தவறு நடப்பின் அவர்களோர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னொருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதனமில்லாதிருக்கும் போது யாதும் பிசகுஉண்டானல் முந்தி வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்தவரிடமிருந்து இடாப்பு ஏர்க்கப்படும் வட்டை விதானை இடாப்பை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் பிறநீங்கலா) இடாப்பில் கையெப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்.

11. எந்தச் சொந்தக்காரனுவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணவில்லை யென்று காணப்படுமாகில், அதைப்பற்றி வ[illegible] விதானை பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சல் த[illegible]

காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கைக் நீக்கிவிடலாம் அல்லது அக்காணியின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால வேறொரு சொந்தக்காரனையேனும் குத்தகைக்காரனையேனும். அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைகாரன் இல்லாவிடத்து அப்பங்கைச் செய்கைபண்ண விரும்படி கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கைச் செய்கைபண்ண விடலாம். இவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைகாரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால அம்முறைச் செய்கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைக் எல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொநதக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் அல்லது குத்தகைகாரனால் தனது காணி செய்கைபண்ணப் படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்க ளெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

12. எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைகாரனாவது 6 ம் பிரிவின்கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கிவிடபபட்டாலன்றி, போகவேளாண்மைக்கு இப்பிரமாணஙகளின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது ஏதும் வேலைசெய்ய வேண்டியவனாயிருந்து அதைச் செய்யத் தவறினால், அவ்வேலை செய்வதற்கு மதித்த தொகையை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் எழுத்துமூலமாய் அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும். அரசாட்சி ஏசெண்டர் நீர்ப்பாய்ச்சல் குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்த சென்ற செலவு இவ்வளவென்று அறிவிப்பார் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் (Director of Irrigation) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும். அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனினது திருப்திக்கேற்க எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டுமிருக்கவேண்டும்.

14. பட்சிகள் அல்லது காட்டுமிருகங்கள் வந்தொதுங்கக்கூடிய மரங்கள் அல்லது குறுங்காடுகள் ஊரவர்களின் கரைக்குளிருந்தால் சொந்தக்காரர்களால் அல்லது குத்தகைக்காரர்களால் அவைகள் அகற்றப்படவேண்டும்.

15. பழைய வழக்கமுறையின்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும் தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக் கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்படவேண்டும்.

16. தண்ணீர் குளக்கட்டிலிருந்து வெளியாகி வட்டைகளுக்கு வந்தபின் அந்தத்தண்ணீர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலையைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அதிகாரத்துக்கு அமைவாக வட்டைவிதானையால் பகிர்ந்து கொடுக்கப்படும். வட்டைவிதானை தன்னுடைய வட்டைக்குள் தண்ணீர் விடப்படவேண்டிய காலத்தில் தண்ணீர் ஓடுவதைத் தடுக்கக்கூடிய (நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் பொறுப்பில்லாத) வரம்புக்கட்டையும் வெட்டுவிக்கலாம். நீர்பாய்ச்சற் பகுதித்தலைவரின் பொருப்பில்லாத எவ்வாய்க்கால் வெளியேயும் அவ்வட்டைக்குட் போகவேண்டிய தண்ணீர் வெளியே ஓடுமாகில் அவ்வாய்க்கால்களையும் அவர் மூடுவிக்கலாம். அக்காலத்தில் மாத்திரமன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச் சேராத வரம்புக்கட்டுகளுக்கு அல்லது வாய்க்கால்களுக்கு அவன் ஒன்றும் செய்யப்படாது.

17. எவனும் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிகளுக்குப் பாயுந் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால், அல்லது மேடான பூமிகளிலிருந்து வரும் மிச்சத்தண்ணீரைத் தடைப்படுத்தினால், அல்லது பொதுவாய் வட்டைகளுககுள் தண்ணீர் பங்கிடுசெய்வதால் எவ்விதமேனும் தலையிட்டால் வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடங்களுக்குப் போய் தானே அப்படியான வக்கடைகளைத் திறத்தல் அல்லது தடைகளைத் துப்பரவுபண்ணல் முதலியன செய்யவேண்டும். வட்டைவிதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிடவும் அதைத் தடைபடுத்தவும் வேறுவழியாய்த் தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறுவிதமாகப் பாவிக்கவும் கூடாது.

18. வட்டை விதைத்து மூன்று நாட்களுக்குள் வட்டைவிதானை முழுவேலியையும் அளந்து ஒவ்வொரு காணிக்காரரின் செய்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு காணிக்காரனுடைய பங்குவீதப்படி பிரிவிட்டுக் கொடுக்கவேண்டும். பிரிவிடப்பட்ட வேலி காணிக்காரனின் வயலுக்கருகில் இல்லாமலுமிருக்கலாம். அவ்விதமாய்ப் பிரித்துக் கொடுத்தபின் ஒவ்வொரு காணிக்காரனின் செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்த வேலியில் நீளத்தைக்காட்டும் ஒரு இடாப்பை வட்டைவிதானை உடனே பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காறனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அனுப்பவேண்டும் அவர் அதைப் பின்தேவைப்படும் போது பார்க்கிறதற்குக் கட்டிவைத்திருத்தல்வேண்டும். புதுக்கம்புகள் தேவையாயிருந்தால் வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும். அதன்பின் அவர் வட்டைவிதானை பேரில் கம்புகள் வெட்டுவதற்கு அவருக்கு ஒரு லைசென்ஸ்பத்திரம் வாங்கிக் கொடுப்போர்.

19. 6 ம் பிரமாணத்துக் கமைவாகக் கூடிய கூட்டத்தில் தீர்மானஞ்செய்த திகதிக்குள் செய்கைக்காரர்கள் வேலியைமுடித்து தேவையான காவல்குடில்கள் வைக்கவேண்டியதுமல்லாமல் ஒவ்வொரு செய்கைக்காரனும் வேலிகளையுங் காவல்குடில்களையும் நல்லநிலபரத்தில் வைத்து வட்டைவிதானை கட்டளைப்படி ஒழுங்கான காவல் காக்கவேண்டும் திறமையில்லாதவர்களையும் பதினாறு வயதுக் குட்பட்டவர்களையும் காவலாளிகளாய் வைக்கப்படாது

20. இரவில் வட்டைவிதானை அல்லது வட்டைகாவலன் வட்டைசுற்றிப் போகும்போது முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் வெளிச்சத்துடன் அவர்களோடு கூடப்போகவேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையில்லை யென்று எண்ணும் வரைக்கும் இவ்விதம் நடைபெறவேண்டும்.

21. என்னகாரணத்தாலாகுதல் வட்டையில் ஏதும் ஒருபங்கு மற்றப்பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால், செய்கைக்காரர்கள் அப்பங்கை வெட்டிச் சூடுவைக்க விடலாம். ஆனால் வட்டைவிதானையுடைய உத்தரவின்றி நெல்லு அடித்து முழுவதையும் வெளியே கொண்டுபோக விடப்படமாட்டாது. அவர்கள் வட்டையிலிருந்து மற்ற வேளாண்மை முழுதும் வெட்டிச் சூடாக்கும்வரையில் வட்டையைக் காவல்பார்த்து வேலியையும் பத்திரப்படுத்தவேண்டும். 6 ம் 7 ம் பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின், காலம்பிந்தி விதைத்ததினால் அல்லது கூட்டத்தில் தீர்மானஞ்செய்த நெல்லைத்தவிர வேறுவிதமான நெல் விதைத்ததினால், வட்டையில் எப்பகுதியாவது விளையாமல் இருந்தால், மற்றப்பகுதியின் செய்கைக்காரர் அப்பூமி விளையும்வரையில் வேலியைப் பத்திரப்படுத்த அல்லது காவல்காக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கமாட்டார்கள.

22. வேளாண்மை வெட்டிமுடிந்தபின் வேலியைப் பிடுங்கித் தடிகளைத் தான் கட்டளையிடும் இடத்தில் குவித்துவைக்கும்படி வட்டை செய்கைக்காரருக்குக் கட்டளை செய்யவேண்டும். சொந்தக்காரர்கள் வட்டைவிதானை சம்மதத்துடன் வயல்களிலிருந்து தடிகளை விதானை கொண்டுபோகலாம் ஆனால், அவர்கள் கொண்டுபோகுந் தடிகளுக்கு வட்டைவிதானைக்குப் பற்றுச்சீட்டுக்கொடுத்து, மறுபோகச் செய்கைக்கு வேளாண்மை செய்தாலுஞ் செய்யாவிட்டாலுந் திருப்பிக் கொடுக்கவேணடும். அல்லது அவைகளின் மதிப்புவிலை கொடுப்பதற்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள்.

23. எல்லாச் செய்கைக்காரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் துப்பரவுபண்ணிப் பெலனைகட்டைவேலி கட்டவேண்டும். அங்கேதான் சூடுகள் வைக்கவேண்டும் செய்கைக்காரர் தங்கள் முறைப்படி வேளாண்மைவெட்டி முடிந்த திகதி தொடக்கம் இரண்டுமாதம் வரைக்கும் சூட்டைக் காவல்காக்கவேண்டும்.

24. வேளாண்மைச் செய்கை முடிந்தபின் 4 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான கூலியும், மாட்டுக்கூலியும் மற்றுஞ் செய்கைக்கடங்கிய கொடுக்குமதிக ளெல்லாம் இறுபடமுன் யாதொரு நெல்லும் வயலிலிருந்து கொண்டுபோகப்படலாகாது. பங்குக்குச் செய்கை பண்ணினால் வயற் சொந்தக்காரனுக்குப் போமதியானவைகள் கொடுத்துத் தீருமட்டும் நெல்லைக் கொண்டுபோகப்படாது.

நெல்லைக் களத்தில் வைக்கிறதினால் நெல்லுக்கு அதிக பழுதுவருமென்று கண்டால், சொந்தக்காரன், அல்லது செய்கைக்காரன், ஆராயிருந்தாலுஞ்சரி தான் கொடுக்குமதியான மற்ற ஆட்களுடைய உத்தரவுபடி நெல்லைக் கொணடுபோகலாம். அல்லது அப்படியான உத்தரவு கொடுக்கப்படாவிட்டால் தான் கொடுமதியான நெல்லை களத்தில்வைக்க அவன் பாத்திரனாவான் மிகுதியை அவன் கொண்டுபோகலாம்.

25. நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் பொறுப்பிலில்லாத எல்லா வயல் வாய்க்கால்களும், நீர்க்கால்களும், பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைககாரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கீழிருக்கும் வட்டைவிதானை பொருப்பிலிருக்கும். எவனாவது அப்படியான வாய்க்கால்களையாவது, நீர்க்கால்களையாவது அவைகளுக்காக விடப்பட்ட நிலத்தையாவது மூடவேனும் கூட்டிப் பிடிக்கவேனும்படாது.

26. காணிக்குள் அல்லது வெளியே புதுவாய்க்கால், வரம்பு அல்லது வேறு கட்டு வேலைகள் தேவையெனக் கண்டால், 13 ம் பிரமாணத்திற் சொல்லியபடி நயம்பெறுங் காணிக்காரரால் தங்கள் தங்களுடைய பங்குவீதப்படி அவைகள் திறக்கப்படவேண்டும். நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவருடைய (Director of Irrigation) பொறுப்பிலிருக்கும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் கீழ், அவ்வகைக்கட்டு வேலைகளைக் கட்டுவதற்கு உத்தரவுகேட்கும் கேள்விகள் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனிடம் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனிடம் எழுத்தில் கேட்கப்படவேண்டும்.

செய்யப்படவேண்டிய வேலையைநடத்துவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்ல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் சொந்தக்காரருக்குப் பொதுவாக உத்தரவு கொடுக்கலாம். அல்லது உத்தரவு கொடுக்க மறுக்கலாம். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல்

வன்னியனுடைய அபிப்பிராயப்படி செய்யக்கேட்ட வேலையானது நீர்ப்பாய்ச்சல் ஒழுங்கின்படி பொதுவான நீர்ப்பாய்ச்சலுக்கு இடையூறாய் அல்லது கேட்ட கேள்விக்காரரை யொழிந்த மற்றகாணிச் சொந்தக்காரருக்கு நட்டமானதா யிருக்குமென்றால் அவ்விண்ணப்பப்பத்திரங்களை அவர் அரசாட்சி ஏசண்டருக்குத் தன்னுடைய அறிக்கைப் பத்திரத்தோடு அனுப்பவேண்டும்.

செய்யப்பட விருக்கும் கட்டுவேலை எந்தச் சொந்தக்காரர்களின் காணிகளைத் தாக்குமோ அந்தச் சொந்தக்காரர்களின் நியாயங்களைக் கவனித்துப் பார்த்ததின்மேல் அரசாட்சி ஏசண்டர் அக்கேள்வி சார்வாய்க கவனிக்கப்படக் கூடியதென்று எண்ணுவாராகில அவர் அதை நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீருக்கு அனுப்புவார். நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் அதை அங்கிகரித்துக்கொண்டால் உத்தரவு அளிக்கப்பட்டதென்று அவர் சொந்தக்கார ருக்கு அறிவிப்பதுடன் அந்த வேலையைச் செய்யத் தொடங்குவதற்கு உதவிசெய்து அந்தக் கட்டுவேலையைச் செய்வதற்கு வேண்டிய யோசனையையும் சொல்லிக்கொடுப்பார்.

வயல் வாய்க்கால்களுக்கு நிலம் விடப்பட்டு அளந்து எல்லை அடையாளக்கட்டை நாட்டப்பட்ட புதுக்காணிகளின் சொந்தக்காரா அல்லது குத்தகைக்காரா தங்கள் காணிகளிருக்கும் கூட்டமான கண்டங்களை நீர்ப்பாய்ச்சல் செய்வதற்காய் படத்திலே காட்டப்பட்டிருக்கும் வயல் வாய்க்கால்களை பங்குவீதம் உண்டாக்கவேண்டும்.

அப்படியான எந்த வயல் வாய்க்காலும் நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் மெச்சிக்கொண்ட ஒழுங்குப்பிரகாரம் காணிச்சொந்தக்காரரால் உண்டாக்கப்பட வேண்டும்.

அப்படியான காணிச்சொந்தக்கார னெவனாவது மற்றெந்தச் சொந்தக்காரரும் தங்கள் வயல் வாய்க்கால் பங்குகளை வெட்டாத அசட்டையினிமித்தம் நீர்ப்பாய்ச்சலுக்குத் தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடாமலிருந்தால், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வேலையைச் செய்துமுடிக்கும்படி மற்றச் சொந்தக்காரருக்குக் கட்டளைபண்ணவேண்டும்.

27. தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அப்படியான வாய்க்கால்களுக்கும் கட்டுகளுக்கும் அல்லது மறுவேலைகளுக்கும் இடங்கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படுங் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளைச் செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிக்கு பதல்கொடுக்க அல்லது தங்கள் தங்கள் காணிகளுக்கு வந்த நய வீதம் நட்டத்தை இறுக்கவும் பாத்திரவாளிகளாவார்கள். கொடுக்கவேண்டிய நட்டம் நீர்ப்பாய்ச்சல் இஞ்சினீருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய ஆலோசனையுடன் அரசாட்சி ஏசண்டரால் தீர்மானிக்கப்படும்.

28. அரசாட்சி ஏசண்டர் குறித்த காலத்துக்குள் 13 ம், 19 ம், 26 ம் இலக்கப் பிரமாணங்களிற் சொல்லிய வேலைகளை எக் காணிக்காரரேனும் செய்யத்தவறினால், அது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் செய்யப்பட்டுச் சென்ற செலவும் தெரியப்படுத்தப்படும். இச்செலவு 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்திற் சொல்லியபடி அறவிடப்படும்.

29. ஒரு கண்டத்தில் இரண்டு வயல்களுக் கிடையிலுள்ள வரம்பையாகுதல் எல்லையையாகுதல் ஒருவரும் மாற்றவும் அல்லது அழிக்கவும் படாது. அப்படி மாற்றினதை அல்லது அழித்ததை வட்டைவிதானை அறிந்தால் சொந்தக்க ரார்களுக்கு அதனை அறிவித்தல்செய்து சாட்சிகளுடன் குறிக்கப்பட்ட இடத்துச்குப்போய் எல்லையைப் பழைய நிலைபரத்துக்குக் கொண்டுவரும்படி அவர்களைக் கேட்கவேண்டும். மூன்று நாட்களுக்குள் இவைகளைச் செய்யத் தவறுங்காலம் அவன் இதனைக் கிராமச்சங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

30. அரசாட்சியாரிடமாவது அல்லது மறுபேரிடமிருந்தாவது வாங்கப்பட்ட அல்லது இனிமேல் வாங்கப்படும் காணிகளின் சொந்தக்காரரும் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் குட்பட்டவர்களாவதுமன்றி, அவர்களின் காணிகள் தண்ணீர்பாய்ச்சக் கூடியதெனக் கண்டு நீர்வரி இடாப்பிற் சேர்க்கப்பட்டவுடன் எந்த வாய்க்கால் வழியாக அப்பூமிகளுக்குத் தண்ணீர்ப்பாய்ச்சுதல் நயமாக விருக்கின்றதோ (நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவர் தண்ணீர் போதியதென்று கண்டால்) அந்த வாய்க்கால்வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உரித்துடையவர்களுமாவார்கள். மேற்சொல்லிய சொந்தக்காரர்களும் செய்கைக்காரர்களும், வரிகளைப்பற்றிய காரியத்தைத்தவிர மற்றப்படிக்கு ஏற்கனவே நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளின் சொந்தக்காரருக்கும் செய்கைக்காரருக்கும் உடைய விசேஷ சகாயங்களையும் உரித்துகளையும் அனுபவித்தல் வேண்டும்.

31. வேளாண்மைச் செய்கையைப்பற்றி எந்தக்காரியத்திலாவது காணிக்காரரின் ஆலோசனையும் உதவியுந் தேவையென்று அரசாட்சி ஏசண்டராவது சொந்தக்காரரின் அதிகப்பகுதியானவர்களாவது எண்ணுங் காலம், சொந்தக்காரரின் ஒரு கூட்டம் வைக்கப்படலாம்.

32. அரசாட்சி ஏசண்டராலும் காலத்துக்குக் காலம் நியமனம்பண்ணப்படும் உத்தியோகத்தர்களாலும் தலைமைக்காரர்களாலும் இப்பிரமாணங்கள் வலியுறுத்தப்படுவதுமன்றி இவைகளை மீறுவோர்கள் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி தண்டிக்கப்படுவதற்கும் பாத்திரவாளிகளு மாவார்கள்.

33. கேட்கப்படும்போது எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய தரையின் சரியான எல்லைகளைக் காட்டவேண்டியதுமன்றி அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால் அவ்வெல்லைகளைக் குறிக்கும்படி வரம்புகள் அல்லது தகுந்த அடையாளங்கள் போடவேண்டும்.

34. சொந்தக்காரர்களும் இக்காரியத்திற் சம்பந்தமுடைய மற்றவர்களும் தங்கள் வயல்களில் சேதம்போகுந் தண்ணீருக்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள். இப்பிரமாணங்களால் தேவையாயிருக்கும் ஏதும் வேலையைக் காணிச் சொந்தக்காரராவது அல்லது செய்கைக்காரராவது செய்யத் தவறினதினிமித்தம் அளவுக்கு மேற்படியான தண்ணீர் தேவையாயிருந்தால், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தம் எண்ணப்படி தண்ணீரைத் தடுக்கவுந் திருப்பவும் முற்றாய்க் கொடுக்காமல்விடவும் அல்லது வேறு சரியெனக் காணும் விதஞ் செய்யவுங் கூடும். நீர்ப்பாய்ச்சல் அல்லது வேறு வாய்க்கால்களில் நெல் விதைக்கப்படாது.

35. நீர்வரிகொடாத காணிச் சொந்தக்காரர் பதிவுபெற்று நீர்ப்பாய்ச்சப்படுங் காணிகளுடன் கூட வேளாண்மை செய்தால் அக்காணிகள் பொது வேலிக்குளிருக்குமிடத்து இதிற் சொல்லிய 14 ம், 15 ம், 17 ம், 18 ம், 19 ம், 20 ம், 21 ம், 22 ம், 23 ம், 24 ம், 25 ம், 26 ம் பிரமாணங்களைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள்.

36. வேளாண்மைச் செய்கைக்காலத்தில் தன்னுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில் அல்லது அதற்குச் சமீபமாகத் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக் கூடியதாய் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்கு வட்டைவிதானைக்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்தின்படி பிடிபட்ட ஆடுமாடுகளை கிராமக்கோட்டுக்கு முன்பாகக் கொண்டுபோவதற்கு தாமதமின்றி அவ்விடத்துப் பொலீஸ் தலைமைக்காரனுக்கு ஒப்புவித்தல் வேண்டும்.

37. செய்கைக்காரரை வேலைகொள்ளும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைக்காரனும் ஒரு புஸ்தகம் வைத்திருந்து தன் செய்கைக்காரருக்கு முற்தொகையாகக் கொடுத்த நெல்லை அல்லது பணத்தை கொடுத்த திகதிபோட்டு அப்புஸ்தகத்தில் பதிந்துவைக்க வேண்டும். அவர் தன் செய்கைக்காரரோடு மூன்று முறையாகிலும் கணக்குச் சரிபார்க்க வேண்டும்: அதாவது, விதைப்பு முடிந்தவுடனும், வேளாண்மை வெட்டத்தொடங்கச் சற்றுமுன்னும், சூடுபோட்டபின்னும் கணக்குப்பார்த்து, செய்கைக்காரர் அது சரியென்று ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய கையொப்பங்களை அல்லது பெருவிரலடையாளங்களைப் புஸ்தகத்தில் பதிந்த கணக்குக்குக் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்.

38. முந்திய பிரமாணங்கள் யாவும் இதனால் அழித்துவிடப்படுகின்றன.

---

## 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்.

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி பட்டிப்பளை ஆறு சம்மாந்துறை நீர்ப்பாய்ச்சற் பிரிவிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு, மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகார மந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனாவர்கள் கட்டளைப்படி,

எவ். ஜீ. ரிறல்,
அக்ற்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஸ்ரீ ஏப்றில்மீ 30 ந் தேதி.

---

அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச் செய்கையைக் குறித்து 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 11 ம் பிரிவின்கீழ் பட்டிப்பளை ஆறு, சம்மாந்துறை நீர்ப்பாய்ச்சற் பகுதிக்கென்று உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 192? ம ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டத்தின் 20A ம் பிரிவின்கீழ் அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவார்கள்.

2. வட்டைவிதானை என்பவன் ஒரு வட்டை, வயற்பகுதி அல்லது பகுதிகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கக்கூடாது.

வட்டை காவலன் என்பவன் வட்டை விதானையின் உதவியாளன். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற்தலைமைககாரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டைக்காவலனை அல்லது பல வட்டை காவலரை நியமனஞ் செய்யலாம்.

வட்டை காவலரின் தவறுகளுக்கு வட்டைவிதானையே பொறுப்பாளியாவான்.

வட்டைவிதானைமாரும், வட்டை காவலரும் வேளாண்மை காலத்தில், கூடுமானால், தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்க வேண்டும். அவர்கள் வேளாண்மை செய்கை காலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையா யிருக்கும் மற்றும் நேரங்களில தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைககாரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக் காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது, வட்டையைவிட்டு விலகக்கூடாது.

வட்டைவிதானை, சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துககு அமைவாக காணிக்காரரால் தெரிவுசெய்யப்படுவான். ஆனால் நியமனமாய்த் தெரிவுசெய்யப்படும் வரைக்கும், அரசாட்சி ஏசண்டர் ஒருவனைக் கொஞ்சக காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானைமார் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைககாரன் அலலது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர் பொறுப்பின்கீழ தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சல் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வை யிடுவார்கள். அவர்கள் இப்பிரமாணங்களை யாவரும் கைக்கொள்ளும்படி செய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்குத் தொடரும்படியாக அம் மீறுதலைக்குறித்து பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிக்க வேண்டும்.

4. வட்டைவிதானைமார் தங்கள் பங்காக, செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவணவிதைப்புக்கு ஒரு மரக்கால் வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர். அத்துடன் வட்டைகாவலனுக்கும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரககால வீதம் அவன் பங்காக மேலதிகம் வைககப்பட வேண்டும். ஒரு வட்டைகாவலனுக்கு மேல் நியமிக்கப்பட்டிருந்தால், அந்தப் பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிக்கப்படும். நெல்லு களத்திலிருந்து கொண்டுபோகப்படுவதற்குமுன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானையும் வட்டைகாவலனும் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அலலது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுப்பங்கை அலலது அதிலேதுமொரு பாகத்தைக் கொடாதபடி தடுக்கலாம். தேவையெனக் காணில் தடுக்கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானை அல்லது வட்டைக்காவலனுக்காக வேலைபார்த்தவருக்குக் கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்சற் குற்றப்பணநிதியுடன் சேர்த்துவிடலாம். வட்டைவிதானைக்கு அல்லது வட்டைகாவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கப்பட்ட பங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்றுக்கொள்ள ஒருவனை அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் சம்பளத்துக்குமாக தடுக்கப்பட்ட பங்கின் ஒரு பகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவு செய்யலாம். இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவண விதைப்புத்தரை இரண்டு ஏக்கர் விசாலமுடையதாகக கணிக்கப்படும். விளைவில் வட்டைவிதானைக்கும் வட்டைகாவலனுக்குமுடைய பங்கு வேளாண்மை வெட்டிமுடிந்து நாலு மாதத்துக்குள் கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க் கொடுக்கப்பட வேண்டும். அவ்வக்காலங்களில் அந்தந்த ஊர்களிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிககப்படும்.

5. வேளாண்மை காலம் சமீபிக்கும்போது அது முன்மாரி, கால வேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் காணிக்காரர் எல்லாருஞ்சேர்ந்து ஒரு சங்கம் கூட்டவேணடும் இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம்பெற்ற இன்னொருவர் சபாநாயகராயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்டவரால் சங்கங் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம் தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை ஏழ நாட்களுக்குமுன் விளம்பரஞ் செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.—

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருக்கு, பின்சொல்லிய கருமங்களில், ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன :—

(*a*) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.

(*b*) இடாப்புக் கொடுத்தலுககு உவந்த திகதிகள்.

(*c*) வேலியடைத்து முடிப்பதற்கு உவந்த தேதிகள்.

(*d*) செய்கைபண்ண வேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேற்சொல்லிய திகதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(ii) கீழே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ் செய்வார்கள், அவையாவன :—

(*e*) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்பட வேண்டும்.

(*f*) செய்கைபண்ணும் விதம்.

(*g*) ஒவ்வொரு வட்டையிலும் விதைபடவேண்டிய நெற்சாதி.

(*h*) வேளாண்மைகாலத்தில் பசமாடும், எருமை மாடுகளுங் கட்டப்பட வேண்டிய இடமும் மாதிரியும்.

(*i*) வேளாண்மைக கடமைகளிலிருந்து தங்களை விலக்கக் கேட்கும் காணிக்காரர்களுடைய விண்ணப்பங்கள்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளாண்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமிக்கப்பட்ட விசாலஞ் செய்கைபண்ணுவதற்குப் போதிய தண்ணீர் இல்லாமலிருந்தால், 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாயச்சல் பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்ய வேண்டிய தேதிகளில் ஏதும்மாற்றங்கள் வேண்டுமோவென்றும் தண்ணீர் குறைவின் நிமித்தம் செய்கைபண்ணாமல் விடப்படவேண்டிய வயற்பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டங் கூடுதல்வேண்டும். ஆனால், தண்ணீர்க்குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப்பற்றி இப்படிக் கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்துகொள்ளக் கூடியதாயிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்படவேண்டுமென்று தீர்மானஞ் செய்ய அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரால் ஏற்படுததப்பட்டவருக்கு அதிகாரமுண்டு தொடக்கத்தில் நீர்ப்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடப்பரப்பின் காணிக்காரர் அல்லது குத்தகைக்காரரெல்லாரும் விசாலத்திற் குறைக்கப்பட்ட இடப்பரப்பின் தத்தமக்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கை பண்ண உரித்துடையவராவார். 6 ம், 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிககப்பட்டவண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அறிவித்தல்கள் ஒட்டுவதாலும், அல்லது வேறு தகக மாதிரிகளாலும், 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களின்படி கூடிய கூட்டத்தின் தீர்மனங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசாரஞ் செய்விப்பார். சொந்தக்காரர் யாவரும் கூட்டத்தின் தீர்மானங்களின்படி செய்யக் கடமைப்பட்டவர்களாவார். ஆனால, போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமா யிராவிட்டால் கூட்டத்தைத் தவணைபோட அல்லது 6 ம் அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத் தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவர் தகுதியுள்ளவரா யிருப்பார். அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப்போலப் பெலப்புடையதா யிருக்கும்.

9. 6 (i) (*b*) ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைகாரனும் தங்களின் வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைககாரர் வேளாண்மைக்காரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டைவிதானைக்குக் கொடுக்கவேண்டும். இவ் விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் கொடுக்கப்படும் அச்சுக்கடுதாசியில் எழுதப்பட்டு சொந்தக்காரனுடையவும், முல்லைககாரனுடையவும், செய்கைக்காரனுடையவுங் கையொப்பங்களையும அல்லது இரண்டு சாட்சிக்ள் முகதாவி விடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதா யிருக்கவேண்டும். இந்த அச்சுக்கடுதாசியில் வேண்டிய விபரங்களெல்லாஞ் சரியாய் நிரப்பப்பட வேண்டும். பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர்களாவார்கள். இந்த இடாப்புக்கொடுத்த நாள் தொடக்கம் முதலாவதாய் முல்லைக்காரனும், செய்கைக்காரரும், வேளாண்மைச் செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவார்கள். இவர்கள் செய்யத் தவறுங்காலம் சொந்தக்காரரும் குத்தகைகாரரும் இவ்வேலைகளுக்குப் பொறுப்பாளிகளாவார்கள். போதிய நியாயமின்றி கவலையீனம் அல்லது தவறு நடப்பின் அவர்கள் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னொருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதனமில்லாதிருக்கும்போது, யாதும் பிசகு உண்டானல், முந்திய வருட வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்தவரிடமிருந்து இடாப்பு ஏற்கப்படும். வட்டைவிதானை இடாப்பை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் புறநீங்கலாக) இடாப்பில் கையொப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்

11. எந்தச் சொந்தக்காரனாவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணவில்லையென்று காணப்படுமாகில் அதைப்பற்றி வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைககாரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கை நீக்கிவிடலாம் அல்லது அக்காணிகளின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால் வேறொரு சொந்தக்காரனையேனும் குத்தகைக்காரனையேனும், அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் இல்லாவிடத்து, அப்

பங்கை செய்கைபண்ண விடும்படி கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கை செய்கைபண்ண விடலாம். அவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் அம்முறைச செய்கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைக ளெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்காரனைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் அல்லது குத்தகைகாரனால தனது காணி செய்கைபண்ணப்படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்க ளெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்.

12. எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைகாரனாவது 6 ம் பிரிவின் கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கிவிடப்பட்டாலன்றி, போகவேளாண்மைக்கு இப்பிரமாணங்களின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைகாரனாவது ஏதும் வேலை செய்யவேண்டியவனாயிருந்து அதைச் செய்யத்தவறினால், அவ்வேலை செய்வதற்கு மதித்த தொகையை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்சல் வன்னியன் எழுத்துமூலமாய அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும் அரசாட்சி ஏசண்டர் நீர்ப்பாய்ச்சல் குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்து சென்ற செலவு இவ்வளவுவென்று அறிவிப்பார். 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீரப்பாய்ச்சற் க ட்டளைச் சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் (Director of Irrigation) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும். அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனினது திருப்திக்கேற்க எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

14. பட்சிகள் அல்லது காட்டு மிருகங்கள் வந்தொதுங்கக்கூடிய மரங்கள் அல்லது குறுங்காடுகள் ஊரவர்களின் தரைக்குள்ளிருந்தால், சொந்தக்காரர்களினால் அல்லது குத்தகைக்காரர்களினால் அவைகள் அகற்றப்பட வேண்டும்..

15. பழைய வழக்கமுறையின்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும் தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக் கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்க வேண்டும். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்பட வேண்டும்.

16. தண்ணீர் குளக்கட்டிலிருந்து வெளியாகி வட்டைகளுக்குள் வந்தபின் அத்தண்ணீர், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அதிகாரத்துக்கு அமைவாக வட்டவிதானையால் பகிர்ந்து கொடுக்கப்படும். வட்டைவிதானை தன்னுடைய வட்டைக்குள் தண்ணீர் விடப்படவேண்டிய காலத்தில் தண்ணீர் ஓடுவதைத் தடுக்கக்கூடிய (நீர்ப்பாய்ச்சல் பகுதித் தலைவரின் பொறுப்பில்லாத) வரம்புக்கட்டுடையும் வெட்டுவிக்கலாம். நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் பொறுப்பில்லாத எவ்வாய்க்கால் வழியேயும் அவ்வட்டைக்குள் போகவேண்டிய தண்ணீர் வெளியே ஓடுமாகில் அவ்வாய்க்கால்களையும் அவர் மூடுவிக்கலாம் அக்காலத்தில் மாத்திரமன்றி வேறு நேரங்களில் தனது வட்டைக்குச் சேராத வரம்புக் கட்டுகளுக்கு அல்லது வாய்க்கால்களுக்கு அவன் ஒன்றும் செய்யப்படாது.

17. எவரும் தன்னுடைய காணிக்குக் கீழிருக்கும் பூமிகளுக்குப் பாயுந் தண்ணீரை வேணுமென்று தடைபண்ணினால், அல்லது மேடான பூமிகளிலிருந்து வரும் மிச்சத் தண்ணீரைத் தடைப்படுத்தினால், அல்லது பொதுவாய் வட்டைகளுக்குள் தண்ணீர் பங்கீடுசெய்வதில் எவ்விதமேனும் தலையிட்டால் வட்டைவிதானை சாட்சிகளுடன் அவ்விடங்களுக்குப்போய், தானே அப்படியான வட்டைகளைத் திறத்தல் அல்லது தடைகளைத் துப்பரவுபண்ணல் முதலியன செய்யவேண்டும். வட்டைவிதானையுடைய கட்டளையின்றி எவராகுதல் தண்ணீர் கொடுக்கவும் பங்கிடவும் அதைத் தடைப்படுத்தவும் வேறு வழியாய்த் தண்ணீரைத் திருப்பிவிடவும் அல்லது வேறுவிதமாகப் பாவிக்கவுங்கூடாது.

18. வட்டை விதைத்து மூன்று நாட்களுக்குள் வட்டைவிதானை முழு வேலியையும் அளந்து ஒவ்வொரு காணிக்காரரின் செய்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு காணிக்காரனுடைய பங்குவீதப்படி பிரிவிட்டுக் கொடுக்கவேண்டும். பிரிவிடப்பட்ட வேலி காணிக்காரனின் வயலுக்கருகில் இல்லாமலுமிருக்கலாம். அவ்விதமாய் பிரித்துக் கொடுத்தபின் ஒவ்வொரு காணிக்காரனின் செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்த வேலியில் நீளத்தைக் காட்டும் ஒரு இடாப்பை வட்டைவிதானை உடனே பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அனுப்பவேண்டும் அவர் அதைப் பின்தேவைப்படும்போது பார்க்கிறதற்குக் கட்டிவைத்திருத்தல் வேண்டும். புதுக்கம்புகள் தேவையாயிருந்தால் வட்டைவிதானை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும். அதன்பின் அவர் வட்டைவிதானை பேரில் கம்புகள் வெட்டுவதற்கு அவருக்கு ஒரு லைசென்ஸ் பத்திரம் வாங்கிக் கொடுப்பார்.

19. 6 ம் பிரமாணத்துக்கமைவாக கூடிய கூட்டத்தில் தீர்மானஞ்செய்த திகதிக்குள் செய்கைக்காரர்கள் வேலியைமுடித்து தேவையான காவல் குடில்கள் வைக்கவேண்டியது மல்லாமல் ஒவ்வொரு செய்கைக்காரனும் வேலிகளையுங் காவல் குடில்களையும் நல்ல நிலைபரத்தில் வைத்து வட்டைவிதானை கட்டளைப்படி ஒழுங்கான காவல் காக்கவேண்டும். திறமையில்லாதவர்களையும் பதினாறு வயதுக்குட்பட்டவர்களையும் காவலாளிகளாய் வைக்கப்படாது

20. இரவில் வட்டைவிதானை அல்லது வட்டைகாவலன் வட்டைசுற்றிப் போகும்போது முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் வெளிச்சத்துடன் அவர்களோடு கூடப்போகவேண்டும். பிரதான நீர்ப்பாச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையில்லையென்று எண்ணும்வரைக்கும் இவ்விதம் நடைபெறவேண்டும்.

21. என்ன காரணத்தாலாகுதல் வட்டையில் ஏதும் ஒரு பங்கு மற்றப்பகுதி வேளாண்மைக்குமுன் விளைந்தால், செய்கைக்காரர்கள் அப்பங்கை வெட்டிச் சூடுவைக்க விடலாம். ஆனால் வட்டைவிதானையுடைய உத்தரவின்றி நெல்லு அடித்து முழுவதையும் வெளியே கொண்டுபோக விடப்படமாட்டாது. அவர்கள் வட்டையிலிருந்து மற்ற வேளாண்மை முழுதும் வெட்டிச் சூடாக்கும் வரையில் வட்டையைக் காவல்பார்த்து வேலியையும் பத்திரப்படுத்த வேண்டும். 6 ம், 7 ம் பிரமாணத்தின் தீர்மானப்படி விதைத்த வேளாண்மை வெட்டியதின்பின், காலம்பிந்தி விதைத்ததினால் அல்லது கூட்டத்தில் தீர்மானஞ்செய்த நெல்லைத்தவிர வேறுவிதமான நெல் விதைத்ததினால், வட்டையில் எப்பகுதியாவது விளையாமல் இருந்தால், மற்றப் பகுதியின் செய்கைக்காரர் அப்பூமி விளையும்வரையில் வேலியைப் பத்திரப்படுத்த அல்லது காவல்காக்க கடமைப்பட்டவர்களா யிருக்கமாட்டார்கள்.

22. வேளாண்மை வெட்டிமுடிந்தபின் வேலியைப் பிடுங்கித் தடிகளைத் தான் கட்டளையிடும் இடத்தில் குவித்து வைக்கும்படி வட்டைவிதானை செய்கைக்காரருக்குக் கட்டளை செய்யவேண்டும். சொந்தக்காரர்கள் வட்டைவிதானை சம்மதத்துடன் வயல்களிலிருந்து தடிகளை கொண்டுபோகலாம். ஆனால், அவர்கள் கொண்டுபோகுந் தடிகளுக்கு வட்டைவிதானைக்கு பற்றுச்சீட்டுக்கொடுத்து, மறுபோகச் செய்கைக்கு வேளாண்மை செய்தாலுஞ் செய்யாவிட்டாலுந் திருப்பிக் கொடுக்கவேண்டும். அல்லது அவைகளின் மதிப்புவிலை கொடுப்பதற்குப் பாத்திரவாளிகளா யிருப்பார்கள்.

23. எல்லாச் செய்கைக்காரருஞ் சேர்ந்து சூட்டுக்களத்தைத் துப்பரவுபண்ணிப் பெலனை கட்டைவேலி கட்டவேண்டும். அங்கேதான் சூடுகள் வைக்கவேண்டும். செய்கைக்காரர் தங்கள் முறைப்படி வேளாண்மைவெட்டி முடிந்த திகதி தொடக்கம் இரண்டு மாதம் வரைக்கும் சூட்டைக் காக்கவேண்டும்.

24. வேளாண்மைச் செய்கை முடிந்தபின் 4 ம் பிரமாணத்தின்படி தலைமைக்காரருக்குப் போமதியான கூலியும், மாட்டுக்கூலியும் மற்றுஞ்செய்கைக்கடங்கிய கொடுக்குமதிக ளெல்லாம் இறுபடமுன் யாதொரு நெல்லும் வயலிலிருந்து கொண்டுபோகப்படலாகாது. பங்குச் செய்கைபண்ணினால் வயற் சொந்தக்காரனுக்குப் போமதியானவைகள் கொடுத்துத் தீருமட்டும் நெல்லைக் கொண்டுபோகப்படாது.

நெல்லைக் களத்தில் வைக்கிறதினால் நெல்லுக்கு அதிக பழுது வருமென்று கண்டால், சொந்தக்காரன், அல்லது செய்கைக்காரன், ஆராயிருந்தாலுஞ்சரி, தான் கொடுக்குமதியான மற்ற ஆட்களுடைய உத்தரவுப்படி நெல்லை கொண்டுபோகலாம். அல்லது அப்படியான உத்தரவு கொடுக்கப்படாவிட்டால் தான் கொடுக்குமதியான நெல்லை களத்தில் வைக்க அவன் பாத்திரனாவான் மிகுதியை அவன் கொண்டுபோகலாம்

25, நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவரின் பொறுப்பிலில்லாத எல்லா வயல் வாய்க்கால்களும், நீர்க்கால்களும், பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குக் கீழிருக்கும் வட்டைவிதானை பொறுப்பிலிருக்கும். எவனாவது அப்படியான வாய்க்கால்களையாவது நீர்க்கால்களையாவது அவைகளுக்காக விடப்பட்ட நிலத்தையாவது மூடவேனும் கூட்டிப்பிடிக்கவேனும் படாது

26. காணிக்குள் அல்லது வெளியே புதுவாய்க்கல், வரம்பு அல்லது வேறு கட்டு வேலைகள் தேவையெனக் கண்டால், 13 ம் பிரமாணத்திற் சொல்லியபடி பயன்பெறுங் காணிக்காரரால் தங்கள் தங்களுடைய பங்குவீதப்படி அவைகள் திறக்கப்பட வேண்டும் நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைவருடைய (Director of Irrigation) பொறுப்பிலிருக்கும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின்கீழ், அவ்வகைக்கட்டு வேலைகளைக் கட்டுவதற்கு உத்தரவுகேட்கும் கேள்விகள் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனிடம் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனிடம் எழுத்தில் கேட்கப்பட வேண்டும்.

செய்யப்படவேண்டிய வேலையை நடத்துவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் சொந்தக்காரருக்குப் பொதுவாக உத்தரவு கொடுக்கலாம், அல்லது உத்தரவு கொடுக்க மறுக்கலாம். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய அபிப்பிராயப்படி செய்யக்கேட்ட வேலையானது நீர்ப்பாய்ச்சல் ஒழுங்கின்படி பொதுவான நீர்ப்பாய்ச்சலுக்கு இடையூறாய் அல்லது கேட்ட கேள்விக்காரரை யொழிந்த மற்றக்காணிச் சொந்தக்காரருக்கு நட்டமானதா யிருக்குமென்றால், அவ்விண்ணப்பப் பத்திரங்களை அவர் அரசாட்சி ஏசண்டருக்குத் தன்னுடைய அறிக்கைப்பத்திரத்தோடு அனுப்பவேண்டும்.

செய்யப்படவிருக்கும் கட்டுவேலை எந்தச் சொந்தக்காரர்களின் காணிகளைத் தாக்குமோ அந்தச் சொந்தக்காரர்களின் நியாயங்களைக் கவனித்துப் பார்த்ததின்மேல் அரசாட்சி ஏசண்டர் அக்கேள்வி சார்வாய்க் கவனிக்கப்படக் கூடியதென்று எண்ணுவாராகில் அவர் அதை நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீருக்கு அனுப்புவார். நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் அங்கீகரித்துக்கொண்டால் உத்தரவு அளிக்கப்பட்டதென்று அவர் சொந்தக்காரருக்கு அறிவிப்பதுடன் அந்த வேலையைச் செய்யத் தொடங்குவதற்கு உதவிசெய்து அந்தக்கட்டுவேலையைச் செய்வதற்கு வேண்டிய யோசனையையும் சொல்லிக் கொடுப்பார்.

வயல் வாய்க்கால்களுக்கு நிலம் விடப்பட்டு அளந்து எல்லை அடையாளக்கட்டை நாட்டப்பட்ட புதுக்காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் தங்கள் காணிகளிருக்கும் கூட்டமான கண்டங்களை நீர்ப்பாய்ச்சல் செய்வதற்காய் படத்திலே காட்டப்பட்டிருக்கும் வயல் வாய்க்கால்களை பங்குவீதம் உண்டாக்கவேண்டும்.

அப்படியான எந்த வயல் வாய்க்காலும் நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீர் மெச்சிக்கொண்ட ஒழுங்குப்பிரகாரம் காணிச் சொந்தக்காரரால் உண்டாக்கப்படவேண்டும்.

அப்படியான காணிச்சொந்தக்காரனெவனுவது மற்றெந்தச் சொந்தக்காரரும் தங்கள் வயல் வாய்க்கால் பங்குகளை வெட்டாத அசட்டையினிமித்தம் நீர்ப்பாய்ச்சலுக்குத் தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடாமலிருந்தால், பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வேலையைச் செய்துமுடிக்கும்படி மற்றச் சொந்தக்காரருக்குக் கட்டளை பண்ணவேண்டும்.

27. தங்களுக்கு நயமில்லாவிட்டாலும் எல்லாச் சொந்தக்காரரும் அப்படியான வாய்க்கால்களுக்கும் கட்டுகளுக்கும் அல்லது மறுவேலைகளுக்கும் இடங்கொடுக்க வேண்டும் ஆனால் அவ்வேலைகளினால் நேரே நயப்படுங் காணிகளின் சொந்தக்காரர்கள் அவ்வேலைகளைச் செய்ததினால் நட்டமடைந்த காணிகளின் சொந்தக்காரர்களுக்கு இப்பிரமாணத்தின்படி எடுக்கப்பட்ட காணிக்கு பதல்கொடுக்க அல்லது தங்கள் தங்கள் காணிகளுக்கு வந்த நயவீதம் நட்டத்தை இறுக்கவும் பாத்திரவாளிகளாவார்கள் கொடுக்கவேண்டிய நட்டம் நீர்ப்பாய்ச்சல் இஞ்சினீருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய ஆலோசனையுடன் அரசாட்சி ஏசண்டரால் தீர்மானிக்கப்படும்.

28. அரசாட்சி ஏசண்டர் குறித்தகாலத்துக்குள் 13 ம், 19 ம், 26 ம் இலக்கப் பிரமாணங்களிற் சொல்லிய வேலைகளை எக்காணிக்காரரேனும் செய்யத்தவறினால், அது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனால் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனால் செய்யப்பட்டுச் சென்ற செலவும் தெரியப்படுத்தப்படும். இச்செலவு 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம அதிகாரத்திற் சொல்லியபடி அறவிடப்படும்.

29. ஒரு கண்டத்தில் இரண்டு வயல்களுக் கிடையிலுள்ள வரம்பையாகுதல், எல்லையையாகுதல் ஒருவரும் மாற்றவும் அல்லது அழிக்கவும் படாது. அப்படி மாற்றினதை அல்லது அழித்ததை வட்டைவிதானை அறிவித்தால சொந்தக்காரர்களுக்கு அதனை அறிவித்தல் செய்து சாட்சிகளுடன் குறிக்கப்பட்ட இடத்துக்குப்போய் எல்லையைப் பழைய நிலைபரத்துக்குக் கொண்டுவரும்படி அவர்களைக் கேட்கவேண்டும். மூன்றுநாட்களுக்குள் இவைகளைச் செய்யத் தவறுங்காலம் அவன் இதனைக் கிராமங்சங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

30. அரசாட்சியாரிடமாவது அல்லது மறுபேரிடமிருந்தாவது வாங்கப்பட்ட அல்லது இனிமேல் வாங்கப்படும் காணிகளின் சொந்தக்காரரும் செய்கைக்காரரும் இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் குட்பட்டவர்களாவதுமன்றி அவர்களின் காணிகள் தண்ணீர்ப்பாய்ச்சக் கூடியதெனக்கண்டு நீர்வரி இடாப்பிற் சேர்க்கப்பட்டவுடன் எந்த வாய்க்கால்வழியாக அப்பூமிகளுக்குத் தண்ணீர்ப்பாய்ச்சுதல் நயமாக விருக்கின்றதோ (நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவர் தண்ணீர் போதியதென்று கண்டால்) அந்த வாய்க்கால்வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உரித்துடையவர்களுமாவார்கள். மேற்சொல்லிய சொந்தக்காரர்களும் செய்கைக்காரர்களும் வரிகளைப் பற்றிய காரியத்தைத் தவிர மற்றப்படிக்கு ஏற்கனவே நீர்ப்பாய்ச்சப்படும் காணிகளின் சொந்தக்காரருக்கும் செய்கைக்காரருக்கும் உடைய விசேஷ சகாயங்களையும் உரித்துகளையும் அனுபவித்தல் வேண்டும்.

31. வேளாண்மைச் செய்கையைப்பற்றி எந்தக்காரியத்திலாவது காணிக்காரரின் ஆலோசனையும் உதவியுந் தேவையென்று அரசாட்சிஏசண்டராவது சொந்தக்காரரில் அதிகப்பகுதியானவர்களாவது எண்ணுங்காலம், சொந்தக்காரரின் ஒருகூட்டம் வைக்கப்படலாம்.

32. அரசாட்சி ஏசண்டராலும் காலத்துக்குக் காலம் நியமனம்பண்ணப்படும் உத்தியோகத்தர்களாலும் தலைமைக்காரர்களாலும் இப்பிரமாணங்கள் வலியுறுத்தப்படுவதுமன்றி மீறுவோர்கள் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி தண்டிக்கப்படுவதற்குப் பாத்திரர்களுமாவார்கள்.

33. கேட்கப்படும்போது எந்தக் சொந்தக்காரனுவது தன்னுடைய தரையின் சரியான எல்லைகளைக் காட்டவேண்டியதுமன்றி அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால் அவ்வேலைகளைக் குறிக்கும்படி வரம்புகள் அல்லது தகுந்த அடையாளங்கள் போடவேண்டும்.

34. சொந்தக்காரர்களும் இக்காரியத்திற் சம்பந்தமுடைய மற்றவர்களும் தங்கள் வயல்களின் சேதம்போகுந் தண்ணீருக்குப் பாத்திரவாளிகளாயிருப்பார்கள். இப்பிரமாணங்களால் தேவையாயிருக்கும் ஏதும்வேலையைக் காணிச் சொந்தக்காரராவது அல்லது செய்கைக்காரராவது செய்யத் தவறினதினிமித்தம் அளவுக்கு மேற்படியான தண்ணீர் தேவையாயிருந்தால், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தம் எண்ணப்படி தண்ணீரைத் தடுக்கவுந் திருப்பவும் முற்றாய்க் கொடுக்காமல் விடவும் அல்லது வேறு சரியெனக் காணும்விதஞ் செய்யவுங்கூடும். நீர்ப்பாய்ச்சல் அல்லது வேறு வாய்க்காலில் நெல் விதைக்கப்படாது.

35. நீர்வரிகொடாத காணிச் சொந்தக்காரர் பதிவுபெற்று நீர்ப்பாய்ச்சப்படுங் காணிகளுடன் கூட வேளாண்மை செய்தால் அக்காணிகள் பொது வேலிக்குளிருக்குமிடத்து, இதிற் சொல்லிய 14 ம், 15 ம், 17 ம், 18 ம், 20 ம், 19 ம், 21 ம், 22 ம், 23 ம், 24 ம், 25 ம், 26 ம் பிரமாணங்களைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களா யிருப்பார்கள்.

36. வேளாண்மைச் செய்கைக்காலத்தில் தன்னுடைய வட்டையில் அல்லது குளக்கட்டின்மேல் அல்லது ஓர் நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால் ஓரத்தில் அல்லது அதற்குச்சமீபமாய்த் திரிந்து வேளாண்மையைச் சேதம்பண்ணக் கூடியதாய் காணப்படும் எல்லா ஆடுமாடுகளையும் பிடிக்கிறதற்கு வட்டைவிதானைக்குத் தத்துவமுண்டு. இப்பிரமாணத்தின்படி பிடிபட்ட ஆடுமாடுகளை கிராமக்கோட்டுக்கு முன்பாகக் கொண்டுபோவதற்கு தாமதமின்றி அவ்விடத்துப் பொலீஸ்தலைமைக்காரனுக்கு ஒப்புவித்தல் வேண்டும்.

37. செய்கைக்காரரை வேலைகொள்ளும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைக்காரனும் ஒரு புஸ்த்தகம் வைத்திருந்து தன் செய்கைக்காரருக்கு முற்தொகையாகக் கொடுத்த நெல்லை அல்லது பணத்தை கொடுத்த திகதிபோட்டு அப்புஸ்தகத்தில் பதிந்து அவர்களுடைய கையொப்பங்களை அல்லது பெருவிரலடையாளங்களைப் புஸ்தகத்தில் பதிந்த கணக்குக்குக் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்.

38. முந்திய பிரமாணங்கள்யாவும் இதனால் அழித்துவிடப்படுகின்றன.

---

## 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டம்

1927 ம் ஆண்டின் 17 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தினுற் திறத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் 11 ம் பிரிவின்படி அக்கரைப்பற்று பாணமைப்பற்று நீர்ப்பாய்ச்சற் பிரிவிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு மேற்சொல்லிய சட்டத்தின் 19 ம் பிரிவின்படி அதிகார மந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

எவ் ஜீ. ரீறல்,
அக்ற்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஆண்டு ஏப்றில்மீ 30 ந் தேதி.

அரசாட்சி ஏசண்டரின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் வேலைகளின் பயிர்ச் செய்கையைக் குறித்து.
1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின 11 ம் பிரிவின்கீழ அக்கரைப்பற்று பாணமைப்பற்று
நீர்ப்பாய்ச்சற் பகுதிகளுக்கு உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

1. 1922 ம் ஆண்டின் 22 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 20 A ம் பிரிவின்கீழ் அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரர் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனென்று அழைக்கப்படுவார்கள்.

2. வட்டைவிதானை என்பவன் ஒரு வட்டை, வயற்பகுதி அல்லது பகுதிகளுக்குப் பொறுப்பாயுள்ள நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன். அவன் அரசாட்சி ஏசண்டரின் அனுமதியின்றி வேறொரு உத்தியோகமும் ஏற்கக்கூடாது.

வட்டை காவலன் என்பவன் வட்டை விதானேயின் உதவியாளன். அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையென்று கண்டால் ஒரு வட்டைகாவலனே அல்லது பல வட்டைகாவலரை நியமனஞ் செய்யலாம்.

வட்டைகாவலரின் தவறுகளுக்கு வட்டைவிதானேயே பொறுப்பாளியாவான்.

வட்டைவிதானேமாரும், வட்டைகாவலரும் வேளாண்மை காலத்தில், கூடுமானல், தங்களுடைய வட்டை அல்லது கண்டங்களிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள் குடியிருக்கவேண்டும். அவர்கள் வேளாண்மைச் செய்கை காலத்தில் அல்லது தங்கள் ஊழியம் தேவையாயிருக்கும் மற்றும் நேரங்களில் தங்கள் நீர்ப்பாய்ச்சற் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்குத் திருப்திகரமெனக் காணப்படும் விசேஷ ஒழுங்குகள் செய்யாது வட்டையைவிட்டு விலகக்கூடாது.

வட்டைவிதானே சாதாரணமாய் அரசாட்சி ஏசண்டரின் அங்கீகாரத்துக்கு அமைவாக காணிக்காரரால் தெரிவுசெய்யப்படுவான். ஆனல் நியமமாய்த் தெரிவுசெய்யப்படும் வரைக்கும், அரசாட்சி ஏசண்டர் ஒருவனேக் கொஞ்சக்காலத்துக்கு நியமிக்கலாம்.

3. வட்டைவிதானேமார் பிரதான நீர்ப்பாய்ச்சற தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனின் கட்டளைப்படி அவர் பொறுப்பின்கீழ் தங்கள் தங்கள் பகுதிகளுக்குரிய நீர்ப்பாய்ச்சற் நெற்செய்கைக் கருமங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வை யிடுவார்கள். அவர்கள் இப்பிரமாணங்களையாவரும் கைக்கொள்ளும்படி செய்து எவரும் அப்பிரமாணங்களை மீறுமிடத்து அப்படியானவர்களுக்கு விரோதமாக வழக்குத் தொடரும்படியாக அம்மீறுதலைக் குறித்து பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவிகக வேண்டும்.

4. வட்டைவிதானேமார் தங்கள் பங்காக, செய்கைக்காரரிடமிருந்து ஒரு அவணவிதைப்புக்கு ஒரு மரக்கால் வீதம் நெல் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவராவர், அத்துடன் வட்டைகாவலனும் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு அவணத்துக்கு ஒரு மரக்கால் வீதம் அவன் பங்காக மேலதிகம் வைக்கப்படவேண்டும். ஒரு வட்டைகாவலனுக்குமேல் நியமிக்கப்பட்டிருந்தால், அந்தப் பங்கு அவர்களுக்கிடையில் வீதப்படி பிரிககப்படும் நெல்லு களத்திருந்து கொண்டு போகப்படுவதற்குமுன் தாங்கள் ஏற்றுக்கொண்ட நெல்லுக்கு வட்டைவிதானேயும் வட்டைகாவலனும் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும். இவர்கள் தங்கள் கடமைகளேச் சரிவர நிறைவேற்ற வில்லையென்று அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைககாரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் கண்டால், அவர்களின் முழுபபங்கை அலலது அதிலேதுமொரு பாகத்தைக கொடாதபடி தடுக்கலாம் தேவையெனக் [illegible]கப்பட்ட அப்பங்கை வட்டைவிதானே அல்லது வட்டைகாவலனுக்காக வேலைபார்த்தவருக்குக்கொடுக்கலாம்; அல்லது நீர்ப்பாய்ச்[illegible]சொல்லியுடன் சேர்த்துவிடலாம் அல்லது வட்டைகாவலனுக்குக் கொடுபடாமல் தடுக்கப்பட்டபங்கை அல்லது அதிலொரு பகுதியை ஏற்று[illegible] செய்கைரி அரசாட்சி ஏசண்டர் நியமிக்கலாம். அப்படிப்பட்ட நியமனம் எழுத்திலிருக்க வேண்டியது. அறவிடுஞ் செலவுக்கும் அறவிடுபவரின் ச[illegible] தடுக்கப்பட்ட பங்கின் ஒருபகுதியை அரசாட்சி ஏசண்டர் பிரிவு செய்யலாம். இப்பிரமாணங்களின் ஒழுங்குக்காக ஒரு அவண் விதைப்புத் [illegible]ரண்டு ஏக்கர் விசாலமுடையதாகக் கணிக்கப்படும், விளைவில் வட்டைவிதானேக்கும் வட்டைகாவலனுககு முடைய பங்கு வேளாண்மை வெட்டிமுடிந்து நாலு மாதத்துக்குள் கொடுபடவேண்டியது. இது தவறுங்காலம், சொல்லிய தவணை முடிந்தவுடன் ஒவ்வொரு பங்குக்குஞ் சரியான பெறுமதி காசாய்க்கொடுக்கப்படவேண்டும். அவ்வக்காலங்களில் அந்தந்த ஊாகளிலுள்ள அகவிலைப்படியே பங்குகளின் பெறுமதி கணிக்கப்படும்.

5. வேளாண்மைகாலம் சமீபிக்கும்போது அது முன்மாரி, கால வேளாண்மை, பின்மாரி அல்லது மறுபோகங்களாயிருந்தாலும் காணிக்காரர் எல்லாருஞ் சேர்ந்து ஒரு சங்கம் கூட்டவேண்டும். இச்சங்கத்தில் அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் எழுத்தில் தத்துவம் பெற்ற இன்னெருவர் சபாநாயகமாயிருப்பார். மேற்சொல்லியபடி அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்டவரால் சங்கம் கூடுமிடமும் நேரமும் நியமிக்கப்படும். அவர் கூட்டத்தைப் பிரசித்தப்படுத்தும் நிமித்தம் தமக்குத் தகுதியெனக் காணப்படும் விதமாய் அறிவித்தல்களை ஏழு நாட்களுக்குமுன் விளம்பரஞ் செய்வார்.

6. முற்கூறிய பிரிவிற் சொல்லிய கூட்டத்தவர்கள்.—

(i) அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரிடம் எழுத்தில் தத்துவம் பெற்றவருககு, பின் சொல்லிய கருமங்களில் ஆலோசனை சொல்லுவார்கள் அவையாவன:—

(a) விதைப்பும் நீர்ப்பாய்ச்சலும் தொடங்குவதற்கும் முடிவதற்கும் ஏற்ற தேதிகள்.

(b) இடாப்புக் கொடுத்தலுக்கு உவந்த திகதிகள்.

(c) வேலியடைத்து முடிப்பதற்கு உவந்த தேதிகள்.

(d) செய்கைபண்ண வேண்டிய விசாலம்.

அரசாட்சி ஏசண்டரால் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவரால் மேற்சொல்லிய திகதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(ii) கீழே கூறப்பட்டவைகளையும் குறித்து தீர்மானஞ் செய்வார்கள், அவையாவன:—

(e) வட்டைகள் என்ன ஒழுங்கின்படி விதைக்கப்பட வேண்டுமென்பதும்.

(f) செய்கை பண்ணும் விதம்.

(g) ஒவ்வொரு வட்டையிலும் விதைபடவேண்டிய நெற்சாதியும்.

(h) வேளாணமைகாலத்தில் பசுமாடுகளும், எருமை மாடுகளுங் கட்டப்படவேண்டிய இடமும் மாதிரியும்.

(i) வேளாண்மைக் கடமைகளிலிருந்து தங்களை விலக்கக் கேட்கும் காணிக்காரர்களுடைய கேள்விகளைக் கவனிப்பதும்.

7. தீர்மானஞ் செய்யப்பட்ட திகதிகளில் வேளாண்மைச்செய்கை தொடங்கக் கூடாமலிருந்தால், அல்லது முன் நியமிக்கப்பட்ட விசாலஞ் செய்கை பண்ணுவதற்குப் போதிய தண்ணீர் இல்லாமலிருந்தால், 5 ம் பிரமாணப்படி நீர்ப்பாய்ச்சல் பெரிய இஞ்சினீரின் ஆலோசனையுடன் இவைகள் செய்ய வேண்டிய தேதிகளில் ஏதும் மாற்றங்கள் வேண்டுமோ வென்றும் தண்ணீர் குறைவின் நிமித்தம் செய்கை பண்ணுமல் விடப்படவேண்டிய வயற்பகுதி எவ்வளவென்றும் தீர்மானிக்க ஒரு கூட்டங் கூடுதல்வேண்டும். ஆனல், தண்ணீர்க்குறைவின் நிமித்தம் விடப்படவேண்டிய வயற்பகுதியைப்பற்றி இப்படிக் கூடிய கூட்டம் ஏகசம்மதமாய் ஓர் தீர்மானம் செய்து கொள்ளக்கூடியதாயிராவிட்டால் எவ்வளவு விசாலம் நீர்ப்பாய்ச்சப்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்ய அரசாட்சி ஏசண்டருக்கு அல்லது அவரால்ஏற்படுத்தப்பட்டவருக்கு அதிகாரமுண்டு தொடக்கத்தில் நீர்ப்பாய்ச்சப்படத் தீர்மானித்த இடப்பரப்பின் காணிக்காரர் அல்லது குத்தகைக்காரரெல்லாரும் விசாலத்திற்குறைக்கப்பட்ட இடப்பரப்பின் தத்தமக்குரிய வீதப்பிரகாரமான ஓர் பங்கைச் செய்கைபண்ண உரித்துடையவராவார். 6 ம் 7 ம் பிரமாணங்களின்படி தீர்மானிக்கப்பட்ட வண்ணம் தங்கள் வேளாண்மைச் செய்கையைக் காணிக்காரர் நடத்துவார்கள்.

8. பறைசாற்றுவிப்பதாலும், பிரபல்யமான இடங்களில் அறிவித்தல்கள் ஒட்டுவதாலும். அல்லது வேறு தக்கமாதிரிகளாலும், 6 ம் அல்லது 7ம் பிரமாணங்களின்படி கூடிய கூட்டத்தின் தீர்மானங்களை அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர் பிரசுரஞ்செய்விப்பார் சொந்தக்காரர்யாவரும் கூட்டத்தின் தீர்மானங்களின்படி செய்யக்கடமைப்பட்டவர்களாவார்கள். ஆனல், போதிய அறிவித்தலின் பின்னும் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் சமுகமா யிராவிட்டால் கூட்டத்தைத் தவணைபோட அல்லது 6ம் அல்லது 7 ம் பிரமாணங்களிற் சொல்லிய கருமங்களைத் தானே தீர்மானிக்க அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரிடமிருந்து தத்துவம் பெற்றவர் தகுதியுள்ளவரா யிருப்பர் அவருடைய தீர்மானங்கள் கூட்டத்தின் தீர்மானங்களைப் போலப் பெலப்புடையதா யிருக்கும்.

9. 6 (i) (a) ம் பிரமாணத்தின்படி குறிக்கப்பட்ட திகதிக்குமுன் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குத்தகைகாரனும் தங்களின் வயலில் வேலைசெய்யப்போகிற முல்லைக்காரர் வேளாண்மைக்காரருடைய பெயர்களடங்கிய இடாப்பொன்றை வட்டைவிதானேக்குக் கொடுக்கவேண்டியது, இவ்விடாப்பு அரசாட்சி ஏசண்டரால் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனல் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனல் கொடுக்கப்படும் அச்சுக்கடுதாசியில் எழுதப்பட்டு சொந்தக்காரனுடையவும், முல்லைக்காரனுடையவும், செய்கைக்காரனுடையவுங் கையொப்பங்களையும் அல்லது இரண்டு சாட்சிகள் முகதாவில் இடப்பட்ட அவர்களுடைய கையடையாளங்களையு முடையதா யிருககவேண்டும். இந்த அச்சுக்கடுதாசியில் வேண்டிய விபரங்களெல்லாஞ் சரியாய் நிரப்பப்பட வேண்டும். பிழையான விபரங்களைக் கொடுப்போர் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவராவார்கள். இந்த இடாப்புக்கொடுத்த நாள் தொடக்கம் முல்லைக்காரனும், செய்கைக்காரனும், சொந்தக்காரனும், குத்தகைக்காரனும், வேளாண்மைச் செய்கையை அடுத்த எல்லா வேலைகளுக்கும் பொறுப்பாளிகளாவார்கள். போதிய நியாயமின்றி கவலையீனம் அல்லது தவறுநடப்பின் அவர்களோர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவார்கள்.

10. ஒரு காணியின் ஆட்சிக்கு இன்னெருவர் உரித்தாய் வந்ததைப்பற்றிய சாதன மில்லாதிருக்கும்போது யாதும் பிசகு உண்டானல் முந்திய வருட வேளாண்மைக்கு இடாப்புக் கொடுத்த வரிடமிருந்து இடாப்பு ஏர்க்கப்படும் வட்டைவிதானே இடாப்பை ஏற்றுக்கொண்டால் (சாட்சிகள் புறநீங்கலாக) இடாப்பில் கையொப்பமிட்டவர் யாவரையும் இப்பிரமாணங்கள் கட்டுப்படுத்தும்

11. எந்தச் சொந்தக்காரனுவது தன்னுடைய பங்கைச் செய்கைபண்ண எண்ணவில்லையென்று காணப்படுமாகில், அதைப்பற்றி வட்டைவிதானே பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுக்கு அறிவித்தல் வேண்டும். அச்சொந்தக்காரன் பிரதான நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அந்த வட்டையிலிருந்து அப்பங்கை நீக்கிவிடலாம் அல்லது அக்காணியின் சொந்தக்காரன் தன் சம்மதத்தை எழுத்திற் கொடுத்தால் வேறொரு சொந்தக்காரனேயேனும் குத்தகைக்காரனேயேனும் அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் இல்லாவிடத்து அப்பங்கைச் செய்கைபண்ண விடும்படி கேட்கும் நெற்செய்கையில் அனுபவமுள்ள வேறெவரையும் அப்பங்கைச் செய்கைபண்ணவிடலாம். இவ்வித வேறு சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் காணிச் சொந்தக்காரனுக்கு ஏதாவது கொடுக்கக் கட்டுப்பட்டவனல்ல: ஆனல் அம்

முறைச் செய்கைக்கு இப்பிரமாணங்களால் தேவைப்பட்டவைக ளெல்லாவற்றிற்கும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கு அவனே சொந்தக்கார னைப்போலப் பாத்திரவாளியாவான். ஆனால் காணியின் சொந்தக்காரனுக்கு மறு சொந்தக்காரனால் அல்லது குத்தகைக்காரனால் தனது காணி செய்கை பண்ணப் படுகிறது விருப்பமில்லாவிடின், அவனே இப்பிரமாணங்களால் தேவைப்பட்ட கருமங்க ளெல்லாவற்றிற்கும் பாத்திரவாளியாவான்,

12. எந்தச் சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது 6 ம் பிரிவின்கீழ் வைத்த கூட்டத்தில் நீக்கி விடப்பட்டாலன்றி, போகவேளாண்மைக்கு இப்பிரமாணங்களின்படி தேவையான யாவையும் செய்வதிலிருந்து விலக்கப்படமாட்டான். சொந்தக்காரனாவது குத்தகைக்காரனாவது ஏதும் வேலை செய்ய வேண்டியவனாயிருந்து அதைச் செய்யத் தவறினால், அவ்வேலை செய்வதற்கு மதித்த தொகையை பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் எழுத்து மூலமாய் அரசாட்சி ஏசண்டருக்கு அறிவிக்கவேண்டும். அரசாட்சி ஏசண்டர் நீர்ப்பாய்ச்சல் குற்றப்பண நிதியிலிருந்து வேண்டிய தொகையை முற்பணமாகக் கொடுக்கவேண்டும். பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் அவ்வேலையை முடித்த சென்றசெலவு இவ்வளவென்று அறிவிப்பார். 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டத்தின் 8 ம் அதிகாரத்தில் விதித்த பிரகாரம் இச்செலவு அறவிடப்படும்.

13. நீர்ப்பாய்ச்சற் பகுதித்தலைவரின் (Director of Irrigation) பொறுப்பிலிராத எல்லாக் குளங்களையும், வரம்புக்கட்டுகளையும், வாய்க்கால்கள் நீர்க்கால்கள் முதலியவைகளையும், சொந்தக்காரர் தங்கள் தங்கள் பங்குவீதம் அரசாட்சி ஏசண்டருடைய அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனுடைய அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனுடைய திருப்திக்கேற்க சரியான நிலைபரத்தில் வைக்கவேண்டும். அதுபோலவே அரசாட்சி ஏசண்டரது அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரனது அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியனினது திருப்திக்கேற்க எல்லா வயல்களும் மட்டமாக்கப்பட்டும் வயல் வரம்புகள் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

14. பட்சிகள் அல்லது காட்டு மிருகங்கள் வந்தொதுங்கக் கூடிய குறுங்காடுகள் ஊரவர்களின் தரைக்குளிருந்தால், சொந்தக்காரர்களினால் அல்லது குத்தகைக்காரர்களினால் அவைகள் அகற்றப்படவேண்டும்.

15. பழைய வழக்கமுறைமின்படி குறிக்கப்பட்ட எல்லைப்படியும் தங்கள் பங்குகள் வீதப்படியும் செய்கை இடங்களுக்கிடையிலுள்ள பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டிருக்கவேண்டும், அரசாட்சி ஏசண்டர் அல்லது பிரதான நீர்ப்பாய்ச்சற் தலைமைக்காரன் அல்லது நீர்ப்பாய்ச்சல் வன்னியன் தேவையெனக் கண்டால், செய்கைபண்ணப்பட்ட வயல்களுக்கூடாக மேற்பார்வை செய்கிறதற்குப் பாவிக்கப் பட் பாதைகள் சொந்தக்காரர்களாலும் குத்தகைக்காரர்களாலும் திறக்கப்பட்டுப் பராமரிக்கப்படவேண்டும்.

